விலை: 50.00
பக்கங்கள் : 16
website : www.valampurii.lk
viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com
சங்கு 25
ஒலி 031 வள்ளுவர் ஆண்டு 2055 தை 05 வெள்ளிக்கிழமை (19.01.2024) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

கல்யாண மாலை
சர்வதேச இலவச திருமண சேவை

T.P: 021 720 1005
இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
kalyanamalai.jaffna@gmail.com
4000/= மட்டுமே

## பொதுமக்களை ஒடுக்க முயற்சிக்கும் சகல சட்டமூலங்களையும் எதிர்க்கின்றோம்

### எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ



(கொழும்பு)
பொதுமக்களை ஒடுக்க முயற்சிக்கும் நிகழ்நிலை காப்பு சட்டமூலத்தை நிராகரிப்பதோடு கடும் எதிர்ப்பை வெளியிடுவதாக எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

அரசாங்கம் நிறைவேற்ற முயற்சிக்கும் நிகழ்நிலை காப்பு சட்டமூலம் தொடர்பில் சிவில் சமூகப் பிரதிநிதிகள் மற்றும் ஏனைய அமைப்புகளுடன் எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற கலந்துரையாடலின் போதே எதிர்க்கட் 15

## மேலும் 3 இலட்சம் குடும்பங்களுக்கு அஸ்வெசும

(கொழும்பு)
7 இலட்சம் அஸ்வெசும மேன்முறையீடுகள் மற்றும் ஆட்சேபனைகளைப் பரிசீலித்த பின்னர், மேலும் 3 இலட்சம் குடும்பங்கள் புதிதாக அஸ்வெசும திட்டத்திற்கு தகுதி பெற்றுள்ளன.

இதில் தகுதியற்ற குடும்பங்களின் எண் 15

## நவம்பர் 18க்கு முன் ஜனாதிபதித் தேர்தல்


### தேர்தல்கள் ஆணைக்குழு

(கொழும்பு)
ஜனாதிபதித் தேர்தலை எதிர்வரும் நவம்பர் 18ஆம் திகதிக்கு ஒரு மாதத்திற்கு முன்னர் நடத்த வேண்டும். அதற்கான ஏற்பாடுகளை தேர்தல்கள் ஆணைக்குழு செய்துவருவதாக ஆணைக்குழுவின் தலைவர் சமன் ஸ்ரீ ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதித் தேர்தல் தொடர்பில் நாட்டில் பல்வேறு கருத்துகள் வெளிப்படுத் 15

## யார் சொன்னாலும் 'யுக்திய' சுற்றிவளைப்பை நிறுத்த முடியாது


### அமைச்சர் டிரான் அலஸ்



*(கொழும்பு)*
யார் சொன்னாலும் போதைப்பொருளுக்கு எதிரான "யுக்திய" சுற்றிவளைப்புச் செயற்பாடுகளை நிறுத்த முடியாது என பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் டிரான் அலஸ் தெரிவித்துள்ளார். *(15ஆம் பக்கம் பார்க்க)*

## ரயில் விபத்து; குடும்பஸ்தர் பலி

### கிளிநொச்சியில் சம்பவம்



(கிளிநொச்சி)
புகையிரத விபத்தில் இளம் குடும்பஸ்தர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

கிளிநொச்சி அறிவியல்நகரில் நேற்று 15

## அனைத்து பிரதேசங்களிலும் நிதி மோசடிகள் அதிகரிப்பு

### பொதுமக்களுக்கு பொலிஸார் எச்சரிக்கை

(கொழும்பு)
நாட்டின் அனைத்துப் பிரதேசங்களிலும் நிதி மோசடிகள் அதிகரித்துள்ளது.

எனவே பொதுமக்கள் அவதானத்துடன் செயற்படுமாறு பொலிஸார் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

நாட்டின் அனைத்து பிரதேசங்களிலும் நிதி மோசடியானது மிக மோசமான பாரதூரமான 15

## அரச ஊழியர்களுக்கான மேலதிக கொடுப்பனவு

### முதற்கட்ட நிதி விடுவிப்பு



(கொழும்பு)
அரச பணியாளர்களுக்கான கொடுப்பனவை 10 ஆயிரம் ரூபாயால் அதிகரிப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ள நிலையில் அதற்கான முதற் 15

## பிரபாகரனின் பிறந்தநாளுக்கு கேக் வெட்டிக் கொண்டாட்டம்

### கைதான பெண் விடுதலை

(மட்டக்களப்பு)
விடுதலைப்புலிகள் அமைப்பின் தலைவர் பிரபாகரனின் பிறந்தநாளை முன்னிட்டு கேக் வெட்டிய காரணத்தினால் கைது செய்யப்பட்ட பெண் விடுதலை செய்யப்பட்டுள்ளார்.

மட்டக்களப்பு நீதவான் நீதிமன்றத்தின் உத்தரவுக்கு அமைய குறித்த பெண் நேற்று விடுதலை செய்யப்பட்டுள்ளார்.

கடந்த வருடம் மாவீரர் தினத்திற்கு 15

## யாழ்.சர்வதேச வர்த்தக கண்காட்சி

### இன்று ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)
யாழ்ப்பாணம் சர்வதேச வர்த்தக கண்காட்சி இன்று ஆரம்பமாகவுள்ளது.

இன்று 19ஆம் திகதி முதல் நாளை மறுதினம் 21 ஆம் திகதி வரை 02

## பயங்கரவாத எதிர்ப்பு சட்டமூலத்துக்கு எதிராக

### நீதிமன்றில் மனுத்தாக்கல்


(கொழும்பு)
அரசாங்கத்தினால் பாராளுமன்றில் முன்வைக்கப்பட்டுள்ள பயங்கரவாத எதிர்ப்பு சட்டமூலத்தின் சில சரத்துக்கள் அரசியலமைப்புக்கு முரணானது என உத்தரவிடக் கோரி உயர்நீதிமன்றில் மற்றுமொரு மனுத்தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

சோசலிச இளைஞர் சங்கத்தினால் 02

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்

## திருமதி கிருஷ்ணாம்பாள் தவவிநாயகம்



தோற்றம் : 25.09.1928
மறைவு : 16.01.2024

யாழ்ப்பாணம் நாரந்தனையைப் பிறப்பிடமாகவும் அல்லைப்பிட்டி 2ம் வட்டாரத்தை வாழ்விடமாகவும் வசிப்பிடமாகவும் பிரான்ஸை தற்போதைய வசிப்பிடமாகவும் கொண்டிருந்த திருமதி. கிருஷ்ணாம்பாள் தவவிநயாகம் அவர்கள் கடந்த 16.01.2024 (செவ்வாய்க்கிழமை) அன்று பிரான்ஸ் Aulnay sous Bois ல் இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற அல்லைப்பிட்டி மண்கும்பான் கிராமத்தலைமைக்காரரும், கிராம சபைத்தலைவருமாக இருந்த காலஞ்சென்ற திரு. தவவிநாயகம் அவர்களின் பாசமிகு மனைவியும் காலஞ்சென்றவர்களான வேலுப்பிள்ளை - சிவனம்மா (நாரந்தனை, டெனியாயா சின்னப்பர்) தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான அல்லைப்பிட்டி செல்லத்துரை உடையார் - சொர்ணம்மா தம்பதியரின் மூத்த மருமகளும் கிருபாலினி (பிரான்ஸ்), சந்திரகுமார் (குமார்ஸ் சொப் - பிரான்ஸ்), சூரியகுமார் (சூரியா ஜூவல்ஸ்-லண்டன்), தவபாலினி (பிரான்ஸ்), ஜெயபாலினி (லண்டன்), குணபாலினி (பிரான்ஸ்), காலஞ்சென்ற உருத்திரகுமார், சத்தியபாலினி (லண்டன்) ஆகியோரின் பாசமிகு தாயாரும் காலஞ்சென்ற இந்திரஜித் (லலிதா ஜூவல்லறி - யாழ்ப்பாணம்), தயாநாயகி (பிரான்ஸ்), பரமேஸ்வரி (லண்டன்). சிவநேசராஜா (பிரான்ஸ்), இரவீந்திரன் (ஆசிரியர் - லண்டன்), ஜெயசீலன் (பிரான்ஸ்), கஜவல்லி (லண்டன்), சிவானந்தன் (லண்டன்) ஆகியோரின் அன்பு மாமியாரும் இரகுநாதன் (பிரான்ஸ்), யுகதாம்பாள் (கனடா), காலஞ்சென்றவர்களான இராமநாதன், குகநாதன், சபாநாதன், நகுலாம்பாள், புவனாம்பாள், புஸ்கராம்பாள் ஆகியோரின் அன்புச் சகோதரியும் தளயசிங்க முதலியார் (நாரந்தனை), காலஞ்சென்றவர்களான தையல்நாயகி, வேலாயுதபிள்ளை, சிவயோகலட்சுமி, நடேஸ்வரி, நடேசபிள்ளை (அல்லைப்பிட்டி, இனிச்சபுளியடி முருகன் ஆலய தர்மகர்த்தா), முருகேசபிள்ளை, இராசலிங்கம் ஆகியோரின் அன்பு மைத்துனியும் மங்கையற்கரசி (அல்லைப்பிட்டி), காலஞ்சென்றவர்களான ஞானசம்பந்தன், இராசம்மா, இரத்தினசபாபதி, சச்சிதானந்தன் ஆகியோரின் சகலியும் வசந்தகோபி-வித்தியாதரன், அபராஜித்-அனிதா, ரவிசங்கர்-சுஜீவா, காண்டீபன்-சுபா, புவிசங்கர்-கலிஸ்ரா, காலஞ்சென்ற தயாளினி, ஜீவிதா-ராஜ்மோகன், கிருஷாந்-ராயிசா, கேதிசங்கர், கஜகுலன்-அபிதா, ஜெயதாரணி-அருண்பிரஷாத், சிவப்பிரகாஷ்-பத்மஸ்ரீ, ஜெயப்பிரசன்னா-மயூரி, கௌரிசங்கர்-தேனுகா, வித்தியாபதி- அருள்மீரா, சிவசக்கரவர்த்தி-அபர்ணா, ஸ்ரீதேவி-அருள்நேசன், விஷ்ணுப்பிரியா, சிவக்குமாரன், சுவர்ணஸ்ரீ-ஸ்ரீதரன், விஷ்ணுதாரகன், லக்சுமிஸ்ரீ, சுகந்தப்பிரியா, சண்முகப்பிரியா, சம்பத்குமார், சரவணன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் துசாந்த், தனுஷ்கா, கைலாஷ், ஸ்மிரிதி, சிவானா, டிலக்ஷன், சிந்திக்கா, ஷ்ருதி, தனுஜ், றிஷ்னா, ஆதித்தி, அக்சயா. சதுஸ்ஷன், ரித்திக், அர்சுனன், லக்ஸ்வின், சச்சின், ஐஸ்வரியா, விஷ்வா, அனன்யா, தக்சனா, ஹரிஷ், கெங்ஹிஸ், மாதவா, மீனாட்சி, கீர்த்தனா. வீரா, றிஷ்வா, காவியா, வெற்றி, பார்கவி, சுவாரா ஆகியோரின் அன்புப்பூட்டியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் கடந்த 17.01.2024 (புதன்கிழமை) தொடக்கம் அவரது இல்லத்தில் (7Av.de la Reunion, 93600 Aulnay Sous Bois) பார்வைக்காக வைக்கப்பட்டு இறுதிக் கிரியைகள் எதிர்வரும் 22.01.2024 (திங்கட்கிழமை) அன்று காலை 8.00 மணி தொடக்கம் 11.00 மணிவரை நடைபெற்று தகனத்திற்காக Crematorium des Joncherolles - 95 rue Marcel Sembat, 93430 Villetaneuse எடுத்துச் செல்லப்பட்டு 1.45 மணியிலிருந்து அஞ்சலிக்காக வைக்கப்பட்டு 3.45 மணிக்கு தகனம் செய்யப்படும்.

சந்திரகுமார் : 0033659566983
சூரியகுமார் : 0044753602641

(18676)

தகவல்:
அல்லைப்பிட்டி செல்லத்துரை உடையார் குடும்பம்


**லங்கா மஹால்(PVT) LTD**

உள்நாட்டு. வெளிநாட்டு விரைவுப் பொதிகள் சேவை



லண்டன் - 925/=
பிரான்ஸ் - 1900/=
ஜேர்மனி - 1700/=
கனடா - 2290/=
அவுஸ்திரேலியா - 2450/=
சுவிஸ் - 2050/=
இந்தியா - 990/=

இலவசமாக உங்கள் வீடுகளுக்கே வந்து பொதிகள் சேகரிக்கப்படும்.
நம்பகமான சேவை.
(18665)

இந்தியாவில் இருந்து இலங்கைக்கு ஆகாய மற்றும் கடல்வழி மார்க்கமூடாக நேரடியாக இறக்குமதி செய்யப்படும் விரைவு பொதிகள் சேவை.

இந்தியா தொடர்புகளுக்கு :
**0091956615 6719**

WESTERN UNION WU MoneyGram. Ria MONEY TRANSFER ஊடாக வெளிநாடுகளிலிருந்து அனுப்பப்படும் பணத்தினை எம்மிடம் இருந்து விரைவாக பெற்றுக்கொள்ளலாம்.

40,கன்னாதிட்டி வீதி, யாழ்ப்பாணம்.
**077 8393 974**


## பயங்கரவாத...

இந்த மனுதாக்கல் செய்யப்பட்டுள்ளது.

அந்த மனுவின் பிரதிவாதியாக சட்டமா அதிபர் பெயரிடப்பட்டுள்ளார்.

குறித்த சட்டமூலத்திற்கு அமைய, இராணுவத்தினர், பொலிஸார் மற்றும் கரையோர பாதுகாப்பு படை ஆகிய தரப்பினரால் எந்த நபரையும் அடிப்படை காரணங்கள் இன்றி கைது செய்து தடுத்து வைக்கக்கூடிய சந்தர்ப்பம் ஏற்படுவதாக மனுவில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (ம-7)

## யாழ்.சர்வதேச...

குறித்த கண்காட்சி யாழ். முற்றவெளி மைதானத்தில் இடம்பெறவுள்ளது.

காலை 10.00 மணி முதல் இரவு 8.00 மணிவரை குறித்த கண்காட்சி நடைபெறவுள்ளது. (ம-7)


## காணி விற்பனைக்கு

**யாழ்ப்பாணம் நாவற்குழி A9 வீதியுடன் 10 பரப்புக்காணி விற்பனைக்கு உண்டு.**

- நிலப்பரப்பு
- நல்ல சூழல் நன்னீரூற்று
- நாவற்குழிச் சந்தியிலிருந்து 3/4 Km
- வடமாகாண சபை 300m
- கைதடிச் சந்தி 1 Km மெயின்றோட்டுடன் உள்ளது.
- விலை நேரில் பேசித் தீர்மானிக்கலாம்.

(18675)

**071 173 3911**
**076 853 5022**


# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



கடந்த 31.01.2023 செவ்வாய்க்கிழமை சிவபதமடைந்த எங்கள் குடும்பத் தலைவி

**அமரர்**

## திருமதி. நகுலாம்பிகை சச்சிதானந்தமூர்த்தி

(நகுலா)

பிறப்பு : 24.09.1960 இறப்பு : 31.01.2023

அவர்களின் ஆண்டுத் திவசம் (திதி) நாளை (20.01.2024) சனிக்கிழமை பகல் 12.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெறும். அத்தருணம் தாங்களும் தங்கள் குடும்ப சகிதம் வருகைதந்து அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு தங்களை அன்புடன் அழைக்கின்றோம்.

(18671)

மூர்வீதி,
மன்னார்.

076 179 8822
074 068 6144

தகவல்
குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திரு. ராஜ் ராஜரட்ணம் அவர்கள் ஆங்கிலத்தில் எழுதிய "UNEVEN JUSTICE" என்ற நூலின் தமிழ் மொழிபெயர்ப்பு :

# சமனற்ற நீதி

## நூல் வெளியீடு

**ராஜ் ராஜரட்ணம்**, 1957 இல் இலங்கையில் பிறந்தார். இவருடைய தந்தையார் ராஜரட்ணம் அவர்கள் உலகப் புகழ் பெற்ற சிங்கர் நிறுவனத்தில் உயர்நிலை அதிகாரியாகக் கடமை யாற்றியவர். இவரின் பூர்வீகம், யாழ்ப்பாணத்தின் வடமராட் சிப் பகுதியிலுள்ள "அல்வாய்" கிராமம் ஆகும்.


ராஜ் ராஜரட்ணம் அவர்கள் ஆரம்பக் கல்வியை இலங்கை யிலும் இந்தியாவிலும் கற்றார். உயர்கல்வியை இங்கிலாந்தில் மேற்கொண்டு, சசெக்ஸ் பல்கலைக்கழகத்தில் பொறியியல் பட்டதாரியானார். அமெரிக்காவின் பென்சில்வேனியா பல்கலைக் கழகத்தில் எம்.பி.ஏ பட்டத்தைப் பெற்றுக்கொண்டார். சேஸ் மேன்ஹாட்டன் வங்கியில் நிதிப் பகுப்பாய்வாளராகத் தனது தொழில் வாழ்க்கையை ஆரம்பித்தார். 1997 ஜனவரியில், தனது சொந்த நிறுவனமான உலகப்புகழ்பெற்ற "கலியன்" முதலீட்டு நிதியத்தை நிறுவினார். 2009 இல், அமெரிக்கப் புலனாய்வுப் பணியகம் ராஜ் ராஜரட்ணத்தை அதிரடியாகக் கைது செய்தது. அமெரிக்க அரசு அவர் மீது ஒருதொகை "உட்தகவல்" வணிகக் குற்றங்களைச் சுமத்தியது. குற்றங்களை ஒப்புக்கொள்ளுமாறு அரசுத் தரப்பு பல்வேறு அழுத்தங்களையும் நெருக்கடிகளையும் அவர்மீது பிரயோகித்தது. தன்மீது சுமத்தப்பட்டவை பொய்க் குற்றச்சாட்டுக்கள் என்பதில் உறுதியாக நின்ற ராஜ் ராஜரட்ணம் இறுதிவரை அமெரிக்க அரசுக்கு எதிராகச் சட்டப் போராட் டத்தை நடத்தினார். நீதிமன்றம் தனக்கு நீதி வழங்கும் என நம்பினார். ஆனால், அமெரிக்க நீதித்துறையிலுள்ள பேராசை பிடித்த சில தனிநபர்களின் சதிகளாலும் பொய்ச் சாட்சி களாலும் அவர் வஞ்சிக்கப்பட்டார். அவருக்குப் பதினொரு ஆண்டுகள் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டது.

இலங்கையில் ராஜ் ராஜரட்ணத்தின் குழந்தைப் பருவம் முதல் அவரது ஐம்பத்துநான்காவது வயதில் அமெரிக்கச் சிறையில் அடைக்கப்பட்டது வரையான வரலாற்றை விவரிக்கும் நூலை அவர் சிறையில் இருந்தபோது எழுதினார். இந்நூல் Uneven Justice என்ற தலைப்போடு 2021 இல் ஆங்கிலத்தில் வெளியாகி மிகுந்த கவனத்தைப் பெற்றது. அந்நூல் இப்போது தமிழில் வெளியாகிறது.

அமெரிக்க நீதித்துறையிலுள்ள ஊழல்களையும் குறைபாடு களையும் உள்ளது உள்ளபடியே தைரியமாகச் சொல்லும் இந் நூலிலுள்ள ஒவ்வொரு எழுத்திலும் அநீதியாகத் தண்டிக்கப் பட்ட ஒரு மனிதனின் நீதி கோரிய குரல் ஒலித்துக் கொண்டே யிருக்கிறது.

**சமனற்ற நீதி : மாணவர்கள், இளைஞர்களிடையே எந்தவொரு விடயத்தையும் அச்சமின்றி எதிர்கொள்ளக்கூடிய தன்னம்பிக்கையையும், உந்துதலையும் வழங்குகிறது. இந்நூல் நிதி, நிர்வாகம், சட்டம் மற்றும் வணிகத்துறையில் உள்ளவர்கள் சவால்களை எதிர்கொள்ளும்போது தங்களுடைய பாதையை நேர்வழியில் அமைத்துக்கொள்ள வழிகாட்டியாகவும் அமைகிறது.**

**இந்நூல் வெளியீட்டு நிகழ்வில்**
**திரு. ராஜ் ராஜரட்ணம் அவர்கள் நேரடியாகக் கலந்துகொண்டு**
**ஆற்றவுள்ள சிறப்புரையானது**
**பெரும் எதிர்பார்ப்பை ஏற்படுத்தியுள்ளது.**




**காலம் : 20.01.2024 சனிக்கிழமை**
**நேரம் : பி.ப 2.45 மணி**
**இடம் : ஹூவர் கலையரங்கம், மருத்துவப் பீடம், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.**

இந்நிகழ்வை நேரலையாக
ஐ.பி.சி தொலைக்காட்சி ஊடாகவும்
ஐ.பி.சி வலையொளியூடாகவும்
சமனற்ற நீதி என்ற முகநூல் வழியாகவும்
பார்வையிட முடியும்.

அனுசரணை

The Jaffna Teaching Hospital Foundation

synamon global

**● Live Streming** IBC தமிழ் TV & Youtube

சமனற்ற நீதி

(C-1882)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ரூ.42 லட்சம் பண மோசடி

## ஒருவர் கைது

யாழைச் சேர்ந்த ஆசிரியரை வெளிநாட்டுக்கு அனுப்பி வைப்பதாக கூறி 42 லட்ச ரூபாய் பணத்தினை மோசடி செய்த கொழும்பை சேர்ந்த அழகுக் கலை நிபுணரை நேற்று முன்தினம் பொலிஸார் கைது செய்துள்ளனர். சம்பவம்தொடர்பில் தெரியவருவதாவது,

தன்னை வெளிநாடு ஒன்றுக்கு அனுப்பி வைப்பதாக ஆசை வார்த்தைகளை கூறி தன்னிடம் இருந்து 42 இலட்ச ரூபாய் பணத்தினை பெற்று, கொழும்பை சேர்ந்த அழகுக் கலை நிபுணர் ஏமாற்றி விட்டார் என யாழ்.பொலிஸ் நிலையத்தில் ஆசிரியர் செய்த முறைப்பாட்டின் பிரகாரம் விசாரணைகளை முன்னெடுத்த பொலிஸார் அழகுக்கலை நிபுணரை கைது செய்தனர். கைது செய்யப்பட்ட பெண்ணை பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைத்து விசாரணைகளை முன்னெடுத்த போது , அவர் பல்வேறு நபர்களிடமும் மோசடி செய்துள்ளமை தெரியவந்துள்ளது.

அத்துடன் அவரது தனிப்பட்ட வங்கி கணக்கில் பல கோடி ரூபாய் பண பரிமாற்றங்களும் இடம்பெற்றுள்ளமை கண்டறியப்பட்டுள்ளது.சம்பவம் தொடர்பில் பொலிஸார் தீவிர விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (நி-5-6-33)

# முள்ளிவீதிப் பகுதியில் அதிகரிக்கும் வழிப்பறி திருட்டு

## பயணிப்போர் அச்சம்

(கரணவாய்)

வடமராட்சி முள்ளி வீதிப் பகுதியில் வழிப்பறி திருட்டு சம்பவங்கள் அதிகரித்துள்ளது என அப் பகுதி மக்கள் தெரிவித்தனர்.

வீதியின் இரு மருங்குகளிலும் பற்றைகள் காணப்படு வதனால் அதற்குள் மறைந் திருந்து குறித்த வீதியினூடாக பயணிக்கும் பயணிகளிடம் வழிப்பறி திருட்டுக்களில் கும்பல் ஒன்று ஈடுபட்டு வருகின்றது. இதனால் ஆவ்வீதியூடாக பயணம் செய்வோர் மிகுந்த அச்சத்தில் பயணிக்கின்றனர்.

குறித்த வழிப்பறியில் ஈடுபடும் கும்பலை கட்டுப்படுத்துவதற்கு நெல்லியடி பொலிஸார் நடவடிக்கை எடுக்க வேண்டும் என அப் பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (நி-5-6-60)

# கரட் விலையில் ஏற்பட்ட மாற்றம்

(கொழும்பு)


நாட்டில் வரலாறு காணாத வகையில் உயர்ந்திருந்த கரட்டின் விலை நேற்று சடுதியாக குறைவடைந்துள்ளது.

கடந்த சில நாட்களாக 2,000 ரூபாவையும் தாண்டி விற்பனை செய்யப்பட்ட கரட்டின் விலை நேற்று 1,000 ரூபாவாக குறைவடைந்துள்ளது.

பேலியகொட சந்தை நிலைவரத்தின் படி, நேற்று ஒரு கிலோ கிராம் கரட்டின் மொத்தவிலை 1,000 தொடக்கம் 1,200 ரூபா வரை விற்பனை செய்யப்பட்டது.

போஞ்சி ஒரு கிலோ கிராமின் மொத்த விலை 550 ரூபா முதல் 600 ரூபா வரையும், கோவா 600 ரூபா முதல் 650 ரூபா வரையும் விற்பனை செய்யப்பட்டது.

தக்காளி ஒரு கிலோ கிராமின் மொத்த விலை 200 ரூபா முதல் 300 ரூபா வரையும், லீக்ஸ் 400 ரூபாவாகவும், கத்திரிக்காய் 550 ரூபா முதல் 600 ரூபா வரையும் விற்பனை செய்யப்பட்டது. (ம-7)



இளவாலை வருத்தப்படாத வாலிபர் சங்கத்தால் கடந்த திங்கட்கிழமை இடம்பெற்ற தைப்பொங்கல் கொண்டாட்ட விளையாட்டு நிகழ்வுகள்.


# கேள்வி அறிவித்தல் - நல்லூர் பிரதேச சபை
## அபிவிருத்தி வேலைத்திட்டம் - கட்டம் -I

01. தலைவர் பெறுகைக்குழு நல்லூர் பிரதேச சபை கொக்குவில் அவர்களினால் தகுதி வாய்ந்த ஒப்பந்தகாரர்களிடமிருந்து அரக்கு முத்திரையிடப்பட்ட கேள்விகளை கீழ் குறிப்பிட்டஅட்டவணையில் விபரிக்கப்பட்டவாறு வேலைகளுக்காக கோரப்படுகிறது.

02. கேள்வியானது தேசிய போட்டி விலைக் கேள்வியின் மூலம் நடாத்தப்படும். ஆயினும் நிதி அமைச்சினால் வெளியிடப்பட்ட 03/2020(i) ஆம் இலக்க 2021.01.11 ஆம் திகதி 04/2016(iii)ஆம் இலக்க 2021.02.18 மற்றும் 04/2016(iv) இலக்க 2023.02.09 ஆம் திகதி பொது நிதிச் சுற்றறிக்கைகளுக்கு அமைவாக வடமாகாணத்தை சார்ந்தவருக்கும் மற்றும் வேண்டப்படும் உரிய தரத்தை கொண்டிருப்போருக்கும் முன்னுரிமையளிக்கப்படும்.

03. கேள்வி பெறத் தகுதியுடையவராவதற்கு வெற்றி பெறும் கேள்விதாரர் கறுப்புப்பட்டியலில் (BlackList) சேர்த்துக் கொள்ளப்படாதவராகவும், அட்டவணையில் காட்டியபடி புனரமைப்பு வேலைகளுக்கு பொருத்தமான தரத்தில் நிர்மாண தொழில் அபிவிருத்தி அதிகார சபையில் (CIDA) பதிவு மேற்கொள்ளப்பட்டிருத்தல் வேண்டும்.

04. தேவையான தகைமைகள் கேள்வி ஆவணம் பகுதி 4 இல் குறிக்கப்பட்டுள்ளது. மேலதிக தகவல்கள் தரவு அட்டவணை (Schedule) கேள்வி ஆவணம் பகுதி 5 இல் காட்டப்பட்டுள்ளது.

05. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் **'தலைவர், உள்ளூராட்சி மன்ற பெறுகைக்குழு, நல்லூர் பிரதேசசபை, 14/5 கருவப்புலம் வீதி கொக்குவில்** எனும் முகவரியில் (தொலைபேசி இலக்கம்- **021-222-2700, 021-314-2841**) இருந்து மேலதிக தகவல்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

06. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் ஆங்கிலமொழியிலான கேள்வி ஆவணமொன்றை **தலைவர் பெறுகைக்குழு, நல்லூர் பிரதேசசபை, 14/5 கருவப்புலம் வீதி கொக்குவில் என்னும் முகவரியில் 2024.01.19 ஆம் திகதியிலிருந்து 2024.02.01 ஆம் திகதி வரை அலுவலக நாட்களில் மு.ப 9.00 தொடக்கம் பி.ப 03.00 வரையும்** மீளளிக்கப்படாத கட்டணமாக **ரூபா. 6,000.00** (வரி நீங்கலாக) பணமாகச் செலுத்தி பெற்றுக்கொள்ளலாம்.

07. கேள்வி ஆவணத்தை இரு பிரதிகளில் பூரணப்படுத்தி **தலைவர், பெறுகைக்குழு, நல்லூர் பிரதேசசபை,14/5 கருவப்புலம் வீதி, கொக்குவில்** என்னும் முகவரிக்கு **2024.02.02** ம் திகதி **மு.ப 10.00** மணிக்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக அனுப்பி வைக்கப்படல் வேண்டும் பிந்திய கேள்விகள் நிராகரிக்கப்படும் கேள்வியானது கேள்வி நேரம் முடிவடைந்த உடனேயே வருகை தரும் கேள்விதாரர் அல்லது அவர்களின் பிரதிநிதிகள் முன்னிலையில் திறக்கப்படும்.

08. கேள்வி பிணை வைப்புத் தொகையினை **தலைவர், பெறுகைக்குழு, நல்லூர் பிரதேசசபை** என்ற பெயரில் கீழே அட்டவணையில் காட்டப்பட்டவாறு அனுமதிக்கப்பட்ட வங்கியில் செலுத்தி அதன் உண்மைப் பிரதியினை விண்ணப்பப்படிவத்துடன் இணைத்து சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும்.

09. கேள்வி திறப்பதற்கான முன்னோடிக் கூட்டம் **2024.01.24** ஆம் திகதி நல்லூர் பிரதேச சபை கலாச்சார மண்டபத்தில் **மு. ப. 10.00** மணிக்கு நடைபெறும். இக் கூட்டத்திற்கு ஆர்வமுள்ள ஒப்பந்தகாரர்கள் கலந்து கொள்ள முடியும்.

| இல | ஒப்பந்த இலக்கம் | வேலை விபரம், ஒப்பந்த இலக்கம் | அண்ணளவான மதிப்பீட்டுத் தொகை (மில்லியன்) | ஒப்பந்த காலம் | வேண்டப்படும் தரம் | கேள்வி செல்லுபடியாகும் காலம் | வேண்டப்படும் கேள்விப்பிணை | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | பிணை வைப்பு | செல்லுபடியாகும் காலம் |
| 1. | NPS/CF-1/2024/01 | கொக்குவில் மீன் சந்தை 1ம் மாடி மிகுதி வேலை புனரமைத்தல். | 25.12 | 90 நாட்கள் | C6/ C5/C4 | 91 நாட்கள் | 376,800.00 | 2024.05.02 |

**தலைவர்,**
**பெறுகைக்குழு,**
**நல்லூர் பிரதேச சபை,**
**கொக்குவில்.**

(C-8163) 2024.01.19


# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 650 | 1200 | 700 | 800 |
| உருளைக்கிழங்கு | 160 | 180 | 180 | 200 |
| பச்சைமிளகாய் | 1200 | 1100 | 1200 | 1000 |
| தக்காளி | 460 | 450 | 500 | 500 |
| மரவள்ளிக்கிழங்கு | 200 | 120 | 150 | 150 |
| கோவா | 750 | 700 | 700 | 900 |
| கரட் | 1800 | 1800 | 1200 | 2600 |
| பூசணி | 150 | 140 | 160 | 200 |
| புடோல் | 380 | 250 | 260 | 300 |
| வாழைக்காய் | 250 | 240 | 200 | 300 |
| சின்ன வெங்காயம் | 380 | 400 | 450 | 450 |
| பெரிய வெங்காயம் | 420 | 450 | 400 | 450 |
| பாகற்காய் | 800 | 700 | 800 | 1200 |
| வெண்டக்காய் | 400 | 400 | 300 | 600 |
| கருணைக் கிழங்கு | 120 | 120 | 140 | 200 |
| பயற்றங்காய் | 600 | 500 | 600 | 600 |
| லீக்ஸ் | 350 | 600 | 650 | 800 |
| பீற்றூட் | 800 | 600 | 800 | 900 |
| கறிமிளகாய் | 700 | 700 | 700 | 1000 |
| முருங்கைக்காய் | -- | -- | 3000 | 3000 |
| போஞ்சி | 600 | 650 | 650 | 1000 |
| கத்தரிதம்புள்ள | 500 | 500 | 600 | 650 |
| கீரை - 1 பிடி | 180 | 160 | 200 | 200 |
| தேசிக்காய் | 300 | 350 | 300 | 250 |
| தேங்காய் (ஒன்று) | 100 | 100 | 120 | 70-100 |
| இராசவள்ளி | 800 | 600 | 550 | 600 |
| வெங்காயப்பூ | 550 | 600 | 700 | 1000 |
| முள்ளங்கி | 200 | 250 | 300 | 300 |
| பொன்னாங்காணி | 100 | 120 | 100 | 80 |
| வல்லாரை | 80 | 35 | 50 | 80 |
| ஈரப்பலா | 100 | 100 | 100 | 150 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புதுக்குடியிருப்பில் கதவடைப்பு போராட்டம் ஒத்திவைப்பு

(நெளுக்குளம்)

பிரதேச சபையின் வாக்குறுதியால் இன்றைய போராட்டம் ஒத்திவைக்கப்படுவதாகவும் ஒரு மாத காலத்திற்குள் தீர்வினை பெற்றுத்தர தவறின் போராட்டம் வெடிக்கும் எனவும் புதுக்குடியிருப்பு வர்த்தக சங்கத்தின் தலைவர் நவநீதன் தெரிவித்தார்.

எமது கோரிக்கைகளிற்கு அமைவாக நேற்று புதுக்குடியிருப்பு பிதேசசபையின் செயலாளர், உப செயலாளர் எம்முடன் கலந்துரையாடி முடிவினை எடுப்பதற்கு அழைப்பு விடுத்திருந்தமைக்கு இணங்க கலந்துரையாடல் இடம்பெற்றது.

குறித்த கலந்துரையாடலின் பின் எங்களால் முன்வைக்கப்பட்ட கோரிக்கைகளை ஒருமாத காலத்துக்குள் நிறைவேற்றி தருவதாக புதுக்குடியிருப்பு பிரதேச சபையினரால் எழுத்து மூலம் ஒப்புதல் கடிதம் வழங்கப்பட்டது.

இந்நிலையில் ஒரு மாத காலப் பகுதிக்குள் நிறைவேற்றி தருவார்கள் என்ற நம்பிக்கையின் அடிப்படையிலும் எழுத்து மூல ஆவணத்தின் அடிப்படையிலும் இன்று நடத்த இருந்த போராட்டத்தினை இடைநிறுத்தி ஒரு மாத கால அவகாசம் கொடுத்திருக்கின்றோம்.

குறித்த காலப்பகுதிக்குள் பிரச்சினைகளை தீர்த்து வைக்க தவறின் நாங்கள் மீண்டும் வர்த்தக சங்கத்தினை ஒன்றுதிரட்டி இவர்களுக்கு எதிரான போராட்டத்தினை நடத்துவதில் எந்தவித மாற்றமும் இல்லை என தெரிவித்தார். (நி-5-6-299)

# யாழில் பல்கலைக்கழக ஊழியர்கள் பகிஷ்கரிப்பு




(யாழ்ப்பாணம்)

யாழ். பல்கலைக்கழக ஊழியர் சங்கம் பல்கலைக்கழகம் முன்பாக நேற்று வியாழக்கிழமை கவனயீர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்டனர்.

பல்கலைக்கழக கல்விசாராப் பணியாளர்களின் சம்பள முரண்பாடு, சம்பள அதிகரிப்பு மற்றும் அவர்களைப் பாதிக்கும் பிரச்சினைகளில் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவும் அரசாங்கமும் தொடர்ந்து ஏமாற்றி வருகின்றமைக்கு எதிர்ப்புத் தெரிவித்தும் உடனடித் தீர்வினை வேண்டியுமே போராட்டத்தை முன்னெடுத்தனர்.

அதேவேளை நேற்று ஒரு நாள் அடையாள வேலை நிறுத்த போராட்டத்திலும் ஈடுபட்டிருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. (நி-5-6-33)


# ஆதன உரிமை மாற்ற அறிவித்தல்

**வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபை :** பண்டத்தரிப்பு பட்டின உப அலுவலகம்
**விண்ணப்பதாரரின் பெயர் :**சூசைப்பிள்ளை யூட் அசோக்குமார்
**சபை ஆதனவரி பதிவேட்டின் படி பெயர் :** வைத்திலிங்கம் கைம்பெண் வள்ளிப்பிள்ளை
**முகவரி: ஆதன இல :** 50, **வீதி:**-சில்லாலை டச்சு வீதி, **வட்டாரம்:** 02

வட்டாரம் 02, சில்லாலை டச்சு வீதியில் அமைந்துள்ள உறுதியின் பிரகாரம் வட மாகாணம் யாழ்ப்பாணம் மாவட்டம் வலிகாமம் தென்மேற்குப்பகுதி பண்டத்தரிப்புஇறை "தம்பானை" எனும் பெயருள்ள நிலப்பரப்பு 01 குழி 13 விஸ்தீரணமுள்ள இவ் ஆதனம் சில்லாலை பண்டத்தரிப்பைச் சேர்ந்த வயித்திலிங்கம் நவரத்தினமும் வயித்திலிங்கம் கணேசலிங்கமும் வயித்திலிங்கம் செல்லத்துரையும் வயித்திலிங்கம் பாலசிங்கமும் ஆகியோரால் "காலஞ்சென்ற எமது மாதா வைத்திலிங்கம் பெண் வள்ளிப்பிள்ளையின் பேரில் வாங்கப்பட்டது என்றும் அதன் ஆவணம் இடப்பெயர்வின்போது தவறிப்போய்விட்டது என்றும் அவரின் பின் கடந்த 40 ஆண்டுகளுக்கு மேலாக இது எங்கள் ஆட்சியிலேயே இருந்து வருகின்றது" என வெளிப்படுத்தி பிரசித்த நொத்தாரிசு ப.இராசகுரு அவர்களால் 5499 ஆம் இலக்க 13.11.2005 ஆம் திகதிய உறுதி எழுதப்பட்டுள்ளது. பின்னர் பிரசித்த நொத்தாரிசு ப.இராசகுரு அவர்களால் எழுதப்பட்ட 5501ஆம் இலக்க 13.11.2005 ஆம் திகதிய உறுதி மூலம் வயித்திலிங்கம் கணேசலிங்கத்திற்கு அழியா நன்கொடை வழங்கப்பட்டு அதன் பின் பிரசித்த நொத்தாரிசு இ.த அன்ரன் பாலசிங்கம் அவர்களால் எழுதப்பட்ட 4276 ஆம் இலக்க 09.11.2013ஆம் திகதிய உறுதி மூலம் சின்னத்தம்பி தேவராசாவுக்கு அறுதி விற்கப்பட்டுள்ளது.

குறித்த இவ் ஆதனம் பிரசித்த நொத்தாரிசு சின்னப்பு சிவபாலசுப்பிரமணியம் அவர்களால் எழுதப்பட்ட 1170ஆம் இலக்க 20.06.2019ஆம் திகதிய உறுதி மூலம் கணேசு கமலராஸ் என்பவருக்கு அறுதி விற்கப்பட்டு, பின்னர் பிரசித்த நொத்தாரிசு **சந்தோசம் ஜேசுநேசன்** அவர்களால் எழுதப்பட்ட 225ஆம் இலக்க 01.02.2023ஆம் திகதிய உறுதி மூலம் **சூசைப்பிள்ளை யூட் அசோக்குமார்** என்பவருக்கு அறுதி விற்கப்பட்டுள்ளது.

**ஆதன விபரம்**

நில அளவையாளர் V.தவராஜா அவர்களால் வரையப்பட்ட 4128ஆம் இலக்க 31.01.2023ஆம் திகதிய நில அளவைப்படத்தின் பிரகாரம் "தம்பானை" நிலப்பரப்பு 01 குழி 13 என கொண்ட இவ் ஆதனத்தின் எல்லைகள் பின்வருமாறு.

வடக்கு - சேமக்காலை
கிழக்கு - சேமக்காலை
தெற்கு -சில்லாலை பண்டத்தரிப்பு வீதி
மேற்கு -வைத்திலிங்கம் செல்லத்துரையின் ஆதனம்

மேற்குறித்த ஆதனத்தை **சூசைப்பிள்ளை யூட் அசோக்குமார்** என்ற பெயரில் சபையின் ஆதன பதிவேட்டில் பதிவு செய்வது தொடர்பாக ஏதேனும் ஆட்சேபனை தெரிவிப்பவர்கள் இன்றிலிருந்து 30 நாட்களுக்குள் சட்டபூர்வமான ஆவணங்களோடு எழுத்து மூலமாகவோ அல்லது நேரடியாகவோ வெளிநாட்டில் வசிப்பவர்களாக இருந்தால் இங்குள்ள உறவினர்கள் ஊடாகவோ ஆட்சேபனையை தெரிவிக்குமாறும் ஆட்சேபனை தெரிவிக்காத சந்தர்ப்பத்தில் விண்ணப்பதாரியின் பெயருக்கு சபையின் ஆதனப் பதிவேட்டில் பதிவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பதையும் இந்த ஆதனப் பெயர் பதிவு செய்வதால் வரக்கூடிய எப்பொறுப்பிற்கும் வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபை பொறுப்பாளி அல்ல என்பதனையும் தெரிவித்துக்கொள்கின்றேன்.

(சி-8160)

செயலாளர்,வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபை, மானிப்பாய்.


# கொக்குவிலில் டெங்கு தரிசிப்பு பல வீடுகளுக்கு சிவப்பு எச்சரிக்கை



(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண மாவட்டத்தில் டெங்கு தாக்கம் அதிகரித்துள்ள நிலையில் நேற்று வியாழக்கிழமை நல்லூர் சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுக்குட்பட்ட கொக்குவில் பகுதியில் விசேட டெங்கு ஒழிப்பு வேலைத்திட்டம் முன்னெடுக்கப்பட்டது.

வடக்கு மாகாண சுகாதார பணிப்பாளர், வடக்கு மாகாண பிரதி பொலிஸ் மா அதிபர் ஆகியோரின் நேரடி பங்கேற்புடன் குறித்த டெங்கு ஒழிப்பு வேலைத்திட்டமானது முன்னெடுக்கப்பட்டது.

கொக்குவில் பகுதியில் உள்ள ஒவ்வொரு வீடுகளுக்கும் சுகாதார அதிகாரிகள் மற்றும் பொலிஸார் விஜயம் மேற்கொண்டதோடு வீடுகளில் டெங்கு நுளம்பு காணப்படும் இடங்கள் அகற்றப்பட்டதோடு பல வீடுகளுக்கு சிவப்பு எச்சரிக்கைகளும் வழங்கப்பட்டன. (நி-5-6-33)


சேவைநயப்பும் மணிவிழா வாழ்த்தும்

திருமதி. புஸ்பராணி சிவலிங்கம்

யா/ஸ்ரீ சோமாஸ்கந்த இந்து ஆரம்ப பாடசாலை




சேவை விபரம்

யா/இளவாலை மெய்கண்டான் ம.வி
(17.08.1988-31.12.1991)
யா/கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை
(01.01.1992-31.12.1993)
யா/இட்டியப்புலம் அ.த.க பாடசாலை
(01.01.1994-30.01.1996)
வ/கனகராயன் இளம் ம.வி
(04.02.1996-29.08.2000)
இ/யோகபுரம் ம.வி
(30.08.2000-24.06.2002)
யா/இட்டியப்புலம் அ.த.க பாடசாலை
(25.06.2002-03.07.2003)
யா/வயாவிளான் ம.வி
(04.07.2003-31.01.2014)
யா/ஸ்ரீ சோமாஸ்கந்த இந்து ஆரம்ப பாடசாலை
(02.01.2014-18.01.2024)

அகவை அறுபதில் ஆசிரியர் பணியிலிருந்து ஓய்வுபெறும் எமது பாடசாலை சக ஆசிரியரின் ஓய்வுக்காலம் சீரும் சிறப்புமாக இருக்க மனதார வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துவோர்– ஆசிரியர் நலன்புரிக் கழகம், யா/ஸ்ரீ சோமாஸ்கந்த இந்து ஆரம்ப பாடசாலை,புத்தூர்.

(18869)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பல கோரிக்கைகளை முன்வைத்து சுகாதார ஊழியர்கள் கவனயீர்ப்பு


சாவகச்சேரி


கிளிநொச்சி

(சாவகச்சேரி)

பல்வேறுபட்ட கோரிக்கைகளை முன்வைத்து நேற்று மதியம் 12-1 மணி வரை சாவகச்சேரி ஆதார மருத்துவமனையின் சுகாதார உதவியாளர்கள் மருத்துவமனை முன்றலில் கவனயீர்ப்பு போராட்டம் ஒன்றினை முன்னெடுத்திருந்தனர்.

இதன்போது "வைத்தியர்களுக்கும் பல்கலைக்கழக விரிவுரையாளர்களுக்கும் வழங்கும் அதிகரித்த கொடுப்பனவை எமக்கும் வழங்கு. சீருடைகளுக்கான கொடுப்பனவை அதிகரி. கடமை புரியும் மேலதிக நேரக் கொடுப்பனவுகளை முற்றாக வழங்கு. ஆளணிப் பற்றாக் குறையை நிவர்த்தி செய்" உள்ளிட்ட கோரிக்கைகளை முன்வைத்து கவனயீர்ப்பில் ஈடுபட்டிருந்தனர். அதேவேளை கிளிநொச்சி ஆதார மருத்துவமனையிலும் சுகாதார ஊழியர்களால் கவனயீர்ப்பு போராட்டம் முன்னெடுக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

(நி-5-6-30-316)

# ஆதனப் பெயர்மாற்றம்

யாழ்ப்பாணம் மாநகரசபைக்குட்பட்ட வட்டாரம் - 11 இடுகாட்டு வீதி, 67/1, என்னும் வரிமதிப்பீட்டு இலக்கத்தைக் கொண்ட ஆதனம் எம்.மரியம்மா என ஆதனப் பதிவேட்டில் பதியப்பட்டுள்ளது.

குறித்த ஆதனம் யாழ்ப்பாணம், வண்ணார்பண்ணை வடமேற்கு இறை, 19.07.2019 ஆம் திகதியிட்டு பிரசித்த நொத்தாரிசு சோ.தேவராஜா முகதாவில் 8640 ஆம் இலக்கத்தில் நிறைவேற்றப்பட்ட பிரகடனப்படுத்தல் சாதனம் மூலம் வெஞ்சஸ்லாஸ் வின்சன் விமலதாஸ் கைம்பெண் மேரிசர்மிளா குறித்த ஆதனத்திற்கு தானே உரிமையாளர் என பிரகடனப்படுத்தியுள்ளார். குறித்த ஆதனம் 22.07.2019 ஆம் திகதியிட்டு பிரசித்த நொத்தாரிசு சோ.தேவராஜா முகதாவில் 86:42 ஆம் இலக்கத்தில் நிறைவேற்றப்பட்ட அறுதி உறுதி மூலம் வெஞ்சஸ்லாஸ் வின்சன் விமலதாஸ் கைம்பெண் மேரிசர்மிளா என்பவர் இரத்தினம் அமலசேகர் பெண் மேரிகேட்டி என்பவருக்கு அறுதியாக வழங்கியுள்ளார்.

**ஆதன அட்டவணை**

வடமாகாணம், யாழ்ப்பாண மாவட்டம், யாழ்ப்பாணப்பகுதி வண்ணார்பண்ணை கோவிற்பற்று வண்ணார்பண்ணை வடமேற்கு இறை யாழ்ப்பாண பிரதேசசெயலக பிரிவு யாழ்ப்பாண மாநகரசபை, J/485 நாவாந்துறை வடக்கு கிராம சேவகர் பிரிவு எல்லைக்குட்பட்ட "பம்மைவெளி குளி பத்து (குளி 10) வீடும் கிணறும்,வான்பயிர் செய்பயிர்களும் இதற்கெல்லைகள்.
கிழக்கு:சேமக்காலை வீதியும்.
வடக்கு: பிலிப் ஜேசுதாஸ் கைம்பெண் செல்வராணியின் ஆதனம்.
மேற்கு: பிரான்சிஸ் கைம்பெண் அடைக்கலத்தின் ஆதனம்.
தெற்கு: திரவியம் அந்தோனிப்பிள்ளையின் உரித்தாளரின் ஆதனமும் இதடங்கலும்

தற்போது இரத்தினம் அமலசேகர் பெண் மேரிகேட்டி இவ்வாதனத்தைத் தமது பெயரிற்கு எமது பதிவேட்டில் பெயர்மாற்றம் செய்வதற்கு விண்ணப்பித்துள்ளார். எனவே இவ்வாதனத்திற்கு உரிமைகோருபவர் யாராவது இருப்பின் பத்திரிகையில் பிரசுரித்த திகதியில் இருந்து ஒருமாதத்திற்குள் உறுதிப்படுத்தப்பட்ட ஆவணங்களுடன் எழுத்து மூலம் அறியத்தருமாறும், உரிமைகோராவிடத்து குறித்த ஆதனமானது அமலசேகர் பெண் மேரிகேட்டி என்னும் பெயரிற்கு மாற்றம் செய்யநடவடிக்கை எடுக்கப்படும் என்பதுடன் இந்த ஆதனப்பெயர்மாற்றம் செய்வதால் வரக்கூடிய எப்பொறுப்பிற்கும் யாழ்.மாநகரசபை பொறுப்பாளி அல்ல என்பதையும் அறியத்தருகின்றேன்.

**ஆணையாளர்.**
**யாழ்.மாநகரசபை.**

(C-81159)

# வீட்டுத்தோட்டம் செய்யுங்கள்

## விவசாய அமைச்சர் ஆலோசனை

(கொழும்பு)

**இலங்கையில் மரக்கறிகளின் விலை உயர்வைத் தணிக்க வீட்டுத்தோட்டங்களைப் பராமரிக்குமாறு பொதுமக்களிடம் விவசாய அமைச்சர் மஹிந்த அமரவீர ஆலோசனை வழங்கியுள்ளார்.**

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

கடந்த காலங்களில் பெய்த கடும் மழையினால் பல மரக்கறி தோட்டங்கள் அழிவடைந்துள்ளதாகவும் இதன் காரணமாக தற்போது மரக்கறிகளுக்கு அதிக விலை அறவிடப்பட்டுள்ளதாக அமைச்சர் தெரிவித்துள்ளார்.

எனவே, மிளகாய், தக்காளி, பல்வேறு கீரைகள் போன்ற அடிப்படைத் தேவைகளைக் கொண்ட வீட்டுத் தோட்டத்தை பராமரிப்பதில் கவனம் செலுத்துமாறும் வேண்டுகோள் விடுத்தார்.

விலைவாசி உயர்வுக்காக என்னையும் விவசாய அமைச்சையும் பலர் திட்டுகிறார்கள். கனமழையால் காய்கறி தோட்டங்களில் ஏற்படும் பாதிப்புகளை மக்கள் புரிந்து கொள்ள வேண்டும். ஒருவர் மீது ஒருவர் குற்றம் சாட்டுவதால்



பிரச்சினைக்கு தீர்வு கிடைக்காது.

இதற்கு தீர்வாக வீட்டுத்தோட்டத்தை பராமரிப்பதில் பொதுமக்கள் கவனம் செலுத்த வேண்டுமென அமைச்சர் மஹிந்த அமரவீர மேலும் தெரிவித்துள்ளார். (நி-5-6)

# இராசிபலன்

19.01.2024
தை 05, வெள்ளிக்கிழமை
நவமி நள்ளிரவு 12.01 மணிவரை

அச்சுவினி முற்பகல் 7.29 மணிவரை
சுபநேரம் -6.35-8.05 மணிவரை
இராகுகாலம்-11.05-12.35 மணிவரை

அமிர்தசித்தம்
சந்திராஷ்டமம்
உத்தரம்.

வள்ளவன்

**மேஷம்** எதிர்பார்க்காமல் செய்த வேலையொன்றில் கணிசமான ஆதாயம் கிடைக்கலாம், வழிபாட்டுச் சிந்தனை மேலோங்கும் நாள், கனவுப் பலிதமுண்டு, பணியில் சிறு மன உளைச்சல் ஏற்படலாம்.

**கடகம்** செய்தொழில் மேன்மையுண்டு, வழிபாட்டால் ஆர்வம் காட்டுவீர்கள், வாழ்க்கைத்தரம் உயர வழிவகை செய்வீர்கள், குடும்ப மகிழ்ச்சி அதிகரிக்கும் வாய்ப்புண்டு.

**துலாம்** சுற்றத்தார் வரவால் சுகம் கூடும் நாள், வழிபாட்டில் ஆர்வம் காட்டுவீர்கள், பயணங்களால் பலனுண்டு, கடமையில் கண்ணும் கருத்துமாக இருப்பீர்கள்.

**மகரம்** வெளியூர்த் தொடர்புகள் அதிகரிக்கும் நாள், நண்பர்கள் சந்திப்பால் பரவசமடைவீர்கள், பிறர் நலன்கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும், பயணங்களால் பலனுண்டு.

**ரிஷபம்** சேமிப்பில் சிறிது கரையலாம், விருப்பங்கள் நிறைவேற விநாயகரை வழிபட வேண்டிய நாள், பக்குவமாகப் பேசி காரியம் சாதிக்க வேண்டிய நாள்.

**சிம்மம்** ஏட்டிக்குப் போட்டியாக செயற்பட்டவர்கள் மனம் மாறுவர், எதிர்கால நலன் கருதி தீட்டிய திட்டங்கள் கைகூடும், பேச்சில் இனிமை தென்படும், பயணங்களால் பலனுண்டு.

**விருச்சிகம்** விரதம், வழிபாடுகளில் நம்பிக்கை வைப்பீர்கள், திட்டமிட்ட காரியங்களில் முன்னேற்றம் காணும் நாள், பயணங்களால் பலனுண்டு, கௌரவமான நாள்.

**கும்பம்** குடும்ப பொறுப்புக்கள் கூடும், பாகப்பிரிவினைகள் சுமுகமாக அமையும், முயற்சிகளில் முன்னேற்றம் காணும் நாள், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும்.

**மிதுனம்** பொது வாழ்வில் மதிப்பும் மரியாதையும் உயரும், எண்ணிய காரியங்கள் உடனுக்குடன் நிறைவேறும் வாய்ப்புண்டு,பொருளாதார நிலை உயர வழிவகை செய்வீர்கள்.

**கன்னி** குடும்ப பெரியவர்கள் உங்களின் செயற்பாடுகளில் குறை கண்டு கூறலாம், பயணங்களின் போது பொருட்களில் கவனம் தேவை, ரோக பயமுண்டு, விரயங்கள் மேலோங்கும் நாள்.

**தனுசு** கேளிக்கை கொண்டாட்டங்களில் கலந்து கொள்ளும் வாய்ப்புண்டு, நெடுநாளைய கனவுகள் நனவாகலாம், புண்ணிய காரியங்களில் ஆர்வம் காட்டுவீர்கள், தாழ்ந்த சுபாவமுண்டு.

**மீனம்** இறைவழிபாட்டுச் சிந்தனை மேலோங்கும் நாள், எதிர்பாராத தனவரவுகள் வந்து சேரலாம், சுப காரியப் பேச்சுக்களில் முன்னேற்றம் காணும் நாள், வாக்கு மேன்மையுண்டு.

பிறர் மனம் புண்படாத பேச்சு தலைசிறந்த தவம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தமிழர்களின் வாக்குகளுக்காக

# இராணுவத்தை காட்டிக் கொடுக்க

# ரணில் முயற்சி - விமல் ஆவேசம்

**(கொழும்பு) ஜனாதிபதி தேர்தலில் தமிழ் வாக்குகளை பெறுவதற்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இராணுவத்தினரை காட்டிக் கொடுக்கும் சட்டங்களை இயற்ற முயற்சிக்கிறார் என பாராளுமன்ற உறுப்பினர் விமல் வீரவன்ச தெரிவித்தார்.**



கொழும்பில் உள்ள தேசிய சுதந்திர முன்னணியின் காரியாலயத்தில் நேற்று முன்தினம் புதன்கிழமை இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போது மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது,

பொருளாதார நெருக்கடியால் ஒட்டு மொத்த மக்களும் பாதிக்கப்பட்டுள்ள நிலையில் நாட்டுக்கு எதிரான கீழ்த் தரமான செயற்பாடுகளை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, முன்னாள் அமைச்சர் பசில் ராஜபக்ஷ ஆகியோர் முன்னெடுத்துள்ளனர்.

2015 ஆம் ஆண்டு அப்போதைய வெளிவிவகாரத்துறை அமைச்சர் மங்கள சமரவீர இலங்கைக்கு எதிராக கொண்டு வரப்பட்ட 30/1 தீர்மானத்துக்கு இணை அனுசரனை வழங்கினார். இந்த தீர்மானத்தை நாட்டு மக்களும், பாராளுமன்றமும் அப்போது அறிந்திருக்கவில்லை.

நாட்டுக்கு எதிராக ஒப்பந்தங்கள் மற்றும் தீர்மானங்களில் இருந்து விலகுவதாக 2019 ஆம் ஆண்டு ஜனாதிபதி தேர்தல் காலத்தில் ராஜபக்ஷர்கள் மக்களுக்கு வாக்குறுதி வழங்கினார்கள். அந்த வாக்குறுதிகளுக்கு அமைய கோட்டாபய ராஜபக்ஷ தலைமையிலான அரசாங்கத்தை நாட்டு மக்கள் தோற்றுவித்தார்கள்.

உண்மையை கண்டறிதல் மற்றும் தேசிய நல்லிணக்கத்தை ஸ்தாபித்தல் ஆணைக் குழுவை ஸ்தாபிக்கும் சட்ட வரைபுக்கான வர்த்தமானி புதுவருட தினத்தன்று வெளியிடப்பட்டுள்ளது.

புலம்பெயர் அமைப்புக்கள் மற்றும் சர்வதேச நாடுகளின் பணிப்புரைக்கு அமைய 2015 ஆம் ஆண்டு முதல் திருட்டுத்தனமாக இயற்றப்பட்ட சட்டங்கள் அனைத்தையும் வலுப்படுத்தும் வகையில் உண்மையை கண்டறிதல் மற்றும் தேசிய நல்லிணக்க ஆணைக்குழு சட்ட மூலம் தயாரிக்கப்பட்டுள்ளது.

இந்த சட்டமூலத்துக்கு அமைய ஆணைக்குழு ஸ்தாபிக்கப்பட்டால் தற்போது நடைமுறையில் உள்ள சாட்சி கட்டளைச் சட்டம் வலுவிழக்கப்படும். இராணுவத்தினருக்கு எதிராக எவர் வேண்டுமனாலும் குற்றச்சாட்டுக்களை முன் வைக்கலாம். பொய் சாட்சியம் வழங்கலாம். சரத் பொன்சேகாவை தவிர ஏனைய இராணுவ அதிகாரிகளுக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்ய முடியும்.

தமிழ் மக்களின் வாக்குகளை பெற்றுக் கொள்வதற்காக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இராணுவத்தினரை காட்டிக் கொடுக்கும் வகையில் செயற்படுகிறார்.

ஆச்சரியம் என்னவென்றால். யுத்த வெற்றியை பிரதான தேர்தல் பிரசாரமாக கொள்ளும் ராஜபக்ஷர்கள் இராணுவத்தினருக்கு எதிரான சட்டமூலங்களுக்கு ஆதரவாக செயற்படுகிறார்கள். ஆகவே இந்த சட்டமூலத்துக்கு எதிராக ஒட்டுமொத்த மக்களும் ஒன்றிணைய வேண்டும் என அவர் தெரிவித்தார். (நி-5-6)

## ஜோன் கெரியைச் சந்தித்த ஜனாதிபதி



(ஜெனிவா)

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிற்கும் அமெரிக்க ஜனாதிபதியின் விசேட பிரதிநிதி ஜோன் கெரிக்கும் இடையில் சுவிட்சர்லாந்தின் டாவோஸ் நகரில் நேற்று முன்தினம் விசேட சந்திப்பொன்று இடம்பெற்றுள்ளது.

சுவிட்சர்லாந்தில் நடைபெற்று வரும் உலக பொருளாதார மாநாட்டுடன் இணைந்து குறித்த சந்திப்பு இடம்பெற்றுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை குறித்த மாநாட்டில் சர்வதேச நாணய நிதியத்தின் முகாமைத்துவ பணிப்பாளர் மற்றும் பிரதி முகாமைத்துவ பணிப்பாளர் ஆகியோரையும் ஜனாதிபதி சந்தித்துக் கலந்துரையாடியுள்ளார் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன்போது நிலையான பொருளாதார வளர்ச்சிக்கு பங்களிக்கும் பல முக்கிய சவால்களை இலங்கை வெற்றிகரமாக முகங்கொடுத்துள்ளதாக ஜனாதிபதி தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (நி-5-6)

## தொலைபேசி பயன்படுத்துவோர் எண்ணிக்கையில் வீழ்ச்சி

(கொழும்பு)

நாட்டில் நிலவி வரும் பொருளாதார நெருக்கடி நிலைமைகளினால் தொலைபேசி பயன்பாட்டில் வீழ்ச்சி பதிவாகியுள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது. கடந்த ஆண்டு நிலையான தொலைபேசிகள் 19.4 சதவீதத்தினாலும் அலைபேசிகள் 5.3 சதவீதத்தினாலும் வீழ்ச்சியடைந்துள்ளன.

நிதி அமைச்சினால் வெளியிடப்பட்டுள்ள அரச நிதி முகாமைத்துவ அறிக்கையில் இந்த விடயம் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

மேலும் இணைய பயநர்களின் எண்ணிக்கையும் கடந்த ஆண்டின் முதல் அரையாண்டு பகுதியில் ஒரு சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்துள்ளது.

கடந்த 2022ஆம் ஆண்டின் முதல் அரையாண்டு பகுதியில் 100 பேருக்கு 146.9 தொலைபேசிகள் காணப்பட்டன.

எனினும் 2023ஆம் ஆண்டு அதே காலப்பகுதியில் இந்த எண்ணிக்கை 137 ஆக குறைவடைந்துள்ளது. பெறுமதி சேர் வரி அதிகரிப்பு காரணமாக தொலைபேசிகளின் விலைகளில் அதிகரிப்பு பதிவாகியுள்ளமையும் இதற்கு முக்கிய காரணமாக தெரிவிக்கப்படுகிறது. (நி-5-6)

## பொதுமன்னிப்பு அதிகாரத்தை ஜனாதிபதிகள் துஷ்பிரயோகம் செய்யக் கூடாது

### உயர்நீதிமன்ற தீர்ப்பு சிறந்த எடுத்துக்காட்டு என்கிறார் ஹிருணிகா

(கொழும்பு)

"என் தந்தை விவகாரத்தில் உயர்நீதிமன்றம் வழங்கியுள்ள தீர்ப்பு வரலாற்று முக் கியத்துவம் வாய்ந்தது" என்று முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் ஹிருணிகா பிரேமச்சந்திர தெரிவித்தார்.

2011 ஆம் ஆண்டு முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் பாரத லக்ஸ்மன் பிரேமச்சந்திர படுகொலை செய்யப்பட்டமை தொடர்பில் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் துமிந்த சில்வாவுக்கு பொதுமன்னிப்பு வழங்கிய முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் தீர்மானம் தன்னிச்சையானது என்று உயர் நீதிமன்றம் அறிவித்துள்ளது.

அத்துடன், குறித்த தீர்மானம் சட்டத்துக்குப் புறம்பானது என்றும் தீர்ப்பளித்துள்ளது.

இது தொடர்பில் ஹிருணிகா பிரேமச்சந்திர கருத்துரைக்கும் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

"இது தனிமனித வெற்றியல்ல, முழு நாட்டின் வெற்றி, உண்மை ஒரு நாள் நிச்சயம் வெல்லும்"

"கோட்டாபயவின் முட்டாள்த்தனமான தீர்மானத்தை உயர்



நீதிமன்றம் சுட்டிக் காட்டியுள்ளது. பொதுமன்னிப்பு அதிகாரத்தை எதிர்கால ஜனாதிபதிகள் துஷ்பிரயோகப்படுத்தக் கூடாது என்பதற்கு உயர்நீதிமன்றத்தின் தீர்ப்பு சிறந்த எடுத்துக்காட்டு"என்றும் ஹிருணிகா பிரேமச்சந்திர மேலும் தெரிவித்தார். (நி-5-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாரதம்

# கட்டார்-பிரான்ஸ் இடையே ஒப்பந்தம் கைச்சாத்து



(காசா)


காசாவில் பணயக் கைதிகளாக வைக்கப்பட்டுள்ள 45 இஸ்ரேலியர்களுக்கு அவசர மருத்துவ உதவிகளை வழங்கும் வகையில் பிரான்ஸ் மற்றும் கட்டார் இடையே ஒப்பந்தமொன்று கைச்சாத்திடப்பட்டுள்ளது.

இந்த நிலையில், இஸ்ரேலியருக்குத் தேவையான மருந்துகளை வழங்குவதற்கு ஈடாக காசா பகுதியில் உள்ள பொதுமக்களுக்கு மருத்துவம் மற்றும் ஏனைய மனிதாபிமான உதவிகள் வழங்கப்பட உள்ளதாக கட்டார் வெளியுறவு அமைச்சர் தெரிவித்துள்ளார்.

இதன்படி, பொதுமக்களுக்கு எவ்வாறான உதவிகள் வழங்கப்படும் என்பது குறித்த விபரங்கள் வழங்கப்படவில்லை என சர்வதேச ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

பல மாதங்களுக்கு தேவையான மருத்துவப் பொதிகள் ஒவ்வொரு பணயக்கைதிக்கும் வழங்கப்படுவதுடன், இதற்கான நடவடிக்கைகளை சர்வதேச செஞ்சிலுவை சங்கம் முன்னெடுக்குமென தெரிவிக்கப்பட்டுள்ளது. (ரி-5-6)

# ஒரே நாளில் 3 நாடுகள் மீது ஈரான் ஏவுகணைத் தாக்குதல்



(டெஹ்ரான்)

24 மணி நேரத்திற்குள் மூன்று நாடுகள் மீது ஈரான் ஏவுகணைத் தாக்குதல் நடத்தியதாக வெளிநாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

அதன்படி வடக்கு ஈராக்கில் உள்ள இஸ்ரேலிய மொசாட் உளவுப் பிரிவின் கட்டடத்தை குறிவைத்து ஈரானிய இராணுவம் பாலிஸ்டிக் ஏவுகணைத் தாக்குதலை நடத்தியதாகவும் சில மணி நேரங்களுக்குப் பிறகு சிரியாவில் உள்ள ஐஎஸ் இலக்குகள் மீது ஏவுகணைத் தாக்குதலை நடத்தியதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இந்த தாக்குதலுக்கு 11 பாலிஸ்டிக் ஏவுகணைகள் பயன்படுத்தப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது. ஐஎஸ் பயங்கரவாதிகளை குறிவைத்து வடக்கு சிரியா மீது நடத்தப்பட்ட தாக்குதலில் பொதுமக்கள் 4 பேர் உயிரிழந்துள்ளதாகவும் 6 பொதுமக்கள் காயமடைந்துள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நேற்று முன்தினம் ஈரான் இராணுவம் பாகிஸ்தானின் பலுசிஸ்தானில் உள்ள ஒரு கிராமத்தின் மீது மற்றொரு தாக்குதலை நடத்தியது. அங்கு இரண்டு குழந்தைகள் கொல்லப்பட்டனர் மற்றும் மூன்று பெண்கள் காயமடைந்தமை குறிப்பிடத்தக்கது.

மேலும் இந்த மூன்று தாக்குதல்களையும் கடுமையாக விமர்சித்த அமெரிக்கா, தாக்குதல்களுக்கு தனது கண்டனத்தை தெரிவித்துள்ளது. (ரி-5-6)

# 2050 ஆம் ஆ...

# 14.5 மில்லியன் ...

## உலகப் பொருளியல் ...

(வோஷிங்டன்)

**2050 ஆம் ஆண்டுக்குள் 14.5 மில்லிய... உயிரிழப்பிற்கு பருவநிலை மாற்றம் காரணமா... எனவும் அதில் வெள்ளத்தால் மட்டுமே 8.5 மில்லி... உயிரிழப்பார்கள் என உலகப் பொருளியல்... அறிக்கையில் வெளியிடப்பட்டுள்ளது.**

குறித்த அறிக்கையினை உலகப் பொருளியல் மாநாடும் ஒலிவர் வைமேன் என்ற ஆலோசனை நிறுவனமும் இணைந்து தயாரித்து கடந்த செவ்வாய்க்கிழமை வெளியிட்டிருந்தன.

குறித்த அறிக்கையில், "பருவநிலை பாதிப்பால் ஏற்படக்கூடிய ஆறு பெரிய விளைவுகள் பட்டியலிடப்பட்டுள்ளன.

அவை, வெள்ளம், வறட்சி, வெப்ப அலைகள், புயல், கட்டுக்கடங்கா தீ ஆகியவற்றுடன் உயர்ந்துவரும் கடல் மட்டம் என்பனவாகும்.

இதில் வெள்ளத்தால் மட்டுமே 2050ஆம் ஆண்டுக்குள் 8.5 மில்லியன் மக்கள் உயிரிழப்பர். இது பருவநிலை மாற்றத்தால் ஏற்படக்கூடிய மிகக் கடுமையான மரண விகிதம் என அறிக்கை சுட்டிக்காட்டுகிறது.

இதற்கு அடுத்தபடியாக, வறட்சி காரணமாக 3.2 மில்லியன் மக்கள் உயிரிழக்கக்கூடும்.

வெப்ப அலைகளால் 2050ஆம் ஆண்டுக்குள் அமெரிக்க டொலர் 7.1 டிரில்லியன் அளவிலான பொருளி...

# 2024 ஆம் ஆண்டின் நடுப்பகுதியில் எத்தியோப்பியாவில் பஞ்சம் அதிகரிக்கும்

## ஐ.நா எச்சரிக்கை



(அடிஸ்அபாபா)

2024 ஆம் ஆண்டின் நடுப்பகுதியில் எத்தியோப்பாவில் பஞ்சம் அதிகரிக்கும் என ஐ.நா எச்சரிக்கை விடுத்துள்ளது.

எத்தியோப்பியாவின் டிக்ரே பகுதியில் கடந்த ஆண்டு ஜூலை மாதம் முதல் 200 இற்கும் மேற்பட்டோர் பட்டினியால் உயிரிழந்துள்ளதாக ஐ.நா தெரிவித்துள்ளது.

கடுமையான வறட்சி மற்றும் போரால் ஏற்பட்ட பாதிப்புக்கள் இந்த நிலைக்கு காரணமென சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

அத்துடன், அட்வா பகுதியை சேர்ந்த 16 பேரும் உயிரிழந்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில், தற்போது 47 வீதமானோர் கடுமையான ஊட்டச்சத்து குறைபாட்டால் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் டிக்ரே பகுதியில் வாழும் 89 வீதமான மக்களுக்கு தற்போது உணவு உதவி தேவைப்படுவதாகவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

எவ்வாறாயினும், எத்தியோப்பியாவுக்கு தேவையான மனிதாபிமான உதவிகள் சரிவர கிடைக்கப்பெறுவதில்லை என அந்த நாட்டு அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.


இதனால் பாதிக்கப்படக் கூடியவர்களை காப்பாற்ற முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாக கவலை வெளியிட்டுள்ளனர். மேலும், பட்டினியில் உயிரிழக்கும் அதிகளவானோர் சிறுவர்கள் மற்றும் இளைஞர்கள் எனத் தெரிவித்தனர்.

ஐ.நாவின் தற்போதைய தரவுகளுக்கமைய, சுமார் 20 மில்லியன் மக்கள் உணவுத் தேவையுடன் எத்தியோப்பாவில் இருப்பதாக தெரிவிக்கப்படுகிறது. (ரி-5-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆண்டுக்குள்
# பேர் உயிரிழப்பர்
## மாநாட்டு அறிக்கை

லியன் மனித
ாக அமையும்
லியன் மக்கள்
ல் மாநாட்டு



யல் இழப்பு ஏற்படக்கூடும்.

பருவநிலை ஏற்படுத்தும் நெருக்கடியால் உலக மக்களிடையே சுகாதாரத்தில் ஏற்றத்தாழ்வு நிலை அதிகரிக்கும்.

இதில் எளிதில் பாதிக்கப்படக் கூடியவர்கள் அதிக சிரமப்படுவர் என்றும் எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

ஆபிரிக்கா, தென்னிந்தியா வட்டாரங்கள் எளிதில் பாதிக்கப்படக்கூடிய இடங்களாக விளங்குகின்றன.

அதற்குக் காரணம் அவர்களிடம் இருக்கும் குறைந்த அளவிலான வளங்கள், உட்கட்டமைப்பு வசதிகள் மற்றும் அத்தியாவசிய மருத்துவ உபகரணங்கள் ஆகும்.

இதில் உலகப் பருவநிலை பங்குதாரர்கள் அனைவரும் உறுதியான நடவடிக்கைகள் எடுத்து கரிமவாயு வெளியேற்றத்தைக் குறைத்து பருவநிலை மாற்றத்தால் ஏற்படக்கூடிய எதிர்மறையான சுகாதார பாதிப்புகளைக் குறைக்க வேண்டும் எனவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (ரி-5-6)

# ஹவுதி அமைப்பின் முகாம் மீது அமெரிக்கா வான் வழித் தாக்குதல்



(வோஷிங்டன்)

ஏமனில் உள்ள ஹவுதி பயங்கரவாதிகள் முகாம் மீது அமெரிக்க விமானங்கள் குண்டு வீசி வான் வழித் தாக்குதல் நடத்தியுள்ளதாக சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

கப்பல்களை தாக்க ஹவுதி வைத்துள்ள 4 ஏவுகணை அமைப்புகளை அழிப்பதற்கு குறிவைத்து இத்தாக்குதல் நடத்தப்பட்டதாக அமெரிக்கா தெரிவித்துள்ளது.

செங்கடல் பகுதியில் அமெரிக்க சரக்குக் கப்பல் மீது ஹவுதி ஏவுகணை வீசித் தாக்கியதைத் தொடர்ந்து இந்த பதிலடி கொடுக்கப்பட்டுள்ளதாக அமெரிக்கா தெரிவித்துள்ளது.


இதேவேளை [illegible] தயாரிக்கப்பட்ட அதி[illegible] தங்களின் படங்களை அமெரிக்க இராணுவம் இணையத்தில் பகிர்ந்துள்ளது. அந்த ஆயுதங்கள் ஒரு படகிலிருந்து பறிமுதல் செய்யப்பட்டதாகவும் ஈரானிலிருந்து அவை ஏமனில் இயங்கும் ஹவுதி கிளர்ச்சியாளர்களுக்கு அனுப்பப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

செங்கடலில் ஹவுதி கிளர்ச்சியாளர்கள் வணிகக் கப்பல்கள் மீது தாக்குதல் நடத்துகின்றன.

இதனால் பெரும்பாலான வணிக கப்பல்களின் போக்குவரத்து இடைநடுவில் நிறுத்தப்படுகின்றன.

அண்மையில் இந்த ஹவுதி அமைப்பினரின் விவகாரத்திற்கு ஒரு முடிவு கொண்டு வரப்படாவிட்டால் இறக்குமதி நாடுகளில் கச்சா எண்ணெய் விலையில் அதிகரிப்பு ஏற்[illegible] குறிப்பிடத்தக்கது. (ரி-5-6)

# ‘காபன் நெகட்டிவ்’ திட்டத்திற்கு பிரித்தானிய அரசு ஒப்புதல்



(லண்டன்)

சூழல் மாசடைவதைத் தடுக்கும் வகையில் அறிமுகப்படுத்தப்பட்ட "காபன் நெகட்டிவ்" திட்டத்திற்கு பிரித்தானிய அரசு ஒப்புதல் அளித்துள்ளது.

இத்திட்டத்தின் மூலம் தொழிற்சாலைகளில் இருந்து வெளியேற்றப்படும் காபன் சேகரிக்கப்பட்டு வடகடலின் அடியில் சேமிக்கப்படும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் இதன் மூலம் ஆண்டுக்கு 4 மில்லியன் தொன் கார்பனை வளிமண்டலத்தில் நுழைய விடாமல் தடுக்க முடியும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எவ்வாறு இருப்பினும் காலநிலை வல்லுநர்கள் இத்திட்டத்திற்கு எதிர்ப்புத் தெரிவித்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ரி-5-6)

# பட்டாசு ஆலையில் ஏற்பட்ட வெடி விபத்து
## 22 பேர் பலி



(பாங்கொக்)

தாய்லாந்திலுள்ள பட்டாசு ஆலையில் ஏற்பட்ட வெடி விபத்தால் 22 பேர் உயிரிழந்துள்ளனர்.

தாய்லாந்து நாட்டின் முவாங் மாவட்டத்தில் தம் போன் சலகாவோ நகரில் சுபான் புரி பகுதியில் பட்டாசு ஆலை ஒன்றில் 30இற்கும் மேற்பட்ட தொழிலாளர்கள் பணியிலிருந்த நிலையில், நேற்று முன்தினம் மாலை திடீரென ஆலையில் வெடி விபத்து ஏற்பட்டது. இச்சம்பவத்தில் 22 பேர் உயிரிழந்துள்ளனர்.

வெடிவிபத்து நடந்ததில், 100 மீற்றர் தொலைவுக்கு பொருட்கள் வீசியடிக்கப்பட்டுள்ளன.

வெடி விபத்து தொடர்பில் விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. (ரி-5-6)

# கனடாவில் சிறுவர்களை தாக்கும் ‘ஸ்டெரப்’ நோய்

(ஒட்டாவா)

கனடாவில் சிறுவர்களை அதிகளவில் பாதிக்கும் ஸ்டெரப் எனப்படும் பக்ரீறியா நோய்த் தொற்று குறித்து எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இந்த பக்ரீறியா தாக்கத்தினால் தொண்டை அழற்சி அதிகளவில் ஏற்படுவதாக மருத்துவர்கள் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

குறித்த பக்ரீறியா தாக்கத்தினால் இதுவரையில் ஆறு சிறுவர்கள் உயிரிழந்துள்ளனர். பத்து வயதிற்கும் குறைந்த சிறுவர்களே மரணித்துள்ளனர்.

கடந்த 2023 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 1 ஆம் திகதி தொடக்கம் டிசெம்பர் மாதம் 31 ஆம் திகதி வரையில் இந்த பக்ரீறியா தாக்கத்தினால் 48 பேர் உயிரிழந்துள்ளனர்.

ஒன்றாரியோ மாகாண பொதுச் சுகாதார அலுவலகம் இந்த விபரங்களை ஊடகங்களுக்கு வெளியிட்டுள்ளது.

நோய் அறிகுறிகள் தொடர்பில் அவதானத்துடன் செயற்படுமாறு மருத்துவர்கள் அறிவுறுத்தல்கள் வழங்கியுள்ளனர். (ரி-5-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குழந்தைகளிடையே வேகமாக பரவும் தொழுநோய்

## தொழுநோய் கட்டுப்பாட்டு பிரிவு எச்சரிக்கை

(கொழும்பு)

**குழந்தைகளிடையே பரவும் தொழுநோயை தடுக்க குழந்தைகளைக் கொண்ட குடும்பங்களில் உள்ள பெரியவர்களை பரிசோதனை செய்ய வேண்டும் என தேசிய தொழுநோய் கட்டுப்பாட்டுப்பிரிவு தெரிவித்துள்ளது.**

குழந்தைகளிடையே தொழுநோயை இல்லா தொழிப்பதற்கான விசேட வேலைத் திட்டம் இவ் வருடம் நடைமுறைப்படுத்தப்படுவதாக அதன் பணிப்பாளர் மருத்துவர் பிரசாத் ரணவீர தெரிவித்துள்ளார்.

நாட்டில் சராசரியாக 1,500 முதல் 2,000 தொழுநோயாளிகள் பதிவாகியுள்ளதுடன், இவர்களில் 10 வீதமானவர்கள் 14 வயதுக்குட்பட்ட குழந்தைகள் எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

தொழுநோயால் பாதிக்கப்பட்ட குழந்தைகளைக் கண்டறிவதன் மூலம் மட்டுமே தொழுநோயை ஒழிக்க முடியும் என்றும் குறிப்பிட்டுள்ளார். குழந்தைகளுக்கு மற்றொரு குழந்தையால் தொழுநோய் தொற்றாது. குழந்தைகளுக்கு ஏற்படும் தொழுநோயில் 90 வீதம் பெரியவர்களால் தொற்றுகிறது.

இதேவேளை, கடந்த வருடம் இலங்கையில் 1,550 தொழுநோயாளிகள் கண்டறியப்பட்டுள்ளனர். அவர்களில் 173 பேர் குழந்தைகள் எனவும் தேசிய தொழுநோய் கட்டுப்பாட்டுப்பிரிவு தெரிவித்துள்ளது. (நி-5-6)

# ஜனாதிபதி ரணில் உகண்டா பயணம்

(கொழும்பு)

அணிசேரா நாடுகளின் மாநாட்டின் 19 ஆவது அரச தலைவர்கள் மாநாடு மற்றும் ஜி 77 மற்றும் சீனாவின் 3 ஆவது தென் மாநாடு என்பவற்றில் பங்கேற்பதற்காக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க உகண்டாவுக்கான உத்தியோகபூர்வ விஜயத்தை மேற்கொண்டுள்ளார்.

இது தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

அணிசேரா நாடுகளின் மாநாட்டின் 19 ஆவது அரச தலைவர்கள் மாநாடு, "உலளாவிய கூட்டு செழுமைக்கான ஒத்துழைப்புக்களை விரிவுபடுத்தல்" என்ற தலைப்பில் இன்றும் நாளையும் உகண்டா கம்பாலா நகரில் நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி-5-6)


# நாடளாவிய ரீதியில் அதிகரித்த தேங்காய் விலை

(கொழும்பு)

நாடளாவிய ரீதியில் தேங்காய் அறுவடையில் பற்றாக்குறை நிலவுவதாக தென்னை விவசாயிகள் தெரிவித்துள்ளனர்.

மோசமான வானிலை காரணங்களால் தேங்காய் அறுவடை வீழ்ச்சியடைந்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. தென்னை அபிவிருத்திச் சபையின் கூற்றுப்படி, ஆண்டு முழுவதும் சுமார் 1500மி.மீ மழைவீழ்ச்சியும் தென்னை அறுவடைக்கு சுமார் 28 செல்சியஸ் வெப்பநிலையும் தேவை.

ஆனால் கடந்த சில மாதங்களாக சில பகுதிகளில் கனமழையும் சில பகுதிகளில் மிகவும் வறண்ட வானிலையும் நிலவுகின்றமையால் இந்தநிலை ஏற்பட்டுள்ளதாக கூறப்படுகிறது. (நி-5-6)



வடமராட்சி கிழக்கு மருதங்கேணி பிரதேச மருத்துவமனையில் நேற்று முன்தினம்இடம்பெற்ற இரத்ததான முகாம். (படம்- மகாலிங்கம்)

# அதிகரிக்கும் காற்று மாசுபாடு முகக்கவசம் அணியுமாறு கோரிக்கை

(கொழும்பு)

நாட்டின் பல பகுதிகளில் காற்றின் தர சுட்டெண் குறைந்து வருவதாக மத்திய சுற்றாடல் அதிகார சபையின் சிரேஷ்ட அதிகாரி தெரிவித்துள்ளார்.

சுவாச நோய்கள் மற்றும் அதனுடன் தொடர்புடைய நோய் நிலைமைகள் உள்ள மக்கள் முகக்கவசங்கள் அணிவது பாதுகாப்பானது என்று அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

நாட்டின் காற்று மாசடைவதற்கு வங்காள விரிகுடா போன்ற பிற நாடுகளின் வெளிப்பகுதிகளில் இருந்து வரும் மாசடைந்த காற்றே காரணம் என்று தெரிவிக்கப்படுகின்றது.

யாழ்ப்பாணம்,கொழும்பு, காலி, ஆகிய முக்கிய மாவட்டங்களிலும் மன்னார் பகுதியிலும் காற்றின் தரக் குறியீடு குறைந்து வருவதாக எச்சரிக்கப்பட்டுள்ளது.

இதனால் குறித்த பகுதிகளில் உள்ள மக்கள் அவதானத்துடன் இருக்குமாறும் கேட்டுக்கொள்ளப்படுகின்றனர். (நி-5-6)

## இன்று ஒரு தகவல் 10



தென்கச்சி கோ.சுவாமிநாதன்

## தனிநபர் சுதந்திரம்

ஒரு பழமொழி சொல்லுவார்கள். "மூடனுக்கு கோபம் மூக்கு மேல்"ன்னு. அப்படின்னா மற்றவர்களுக்கெல்லாம் கோபம் காது மேலேயா என்று கேட்காதீர்கள்.

"அப்படி இல்லை!" இப்ப நீங்க நேரா நிமிர்ந்து நில்லுங்க! உங்கள் உடம்பிலே முன்னாடி இருக்கிறது எது? மூக்கு!

"இல்லையே வயிறுதானே முன்னாலே இருக்கு" என்று சொல்லாதீர்கள்.அது ஆண்டவனா வடிவமைத்தது கிடையாது. அது நீங்களா வடிவமைத்துக் கொண்டது. அதற்காக கவலைப்பட்டுக் கொண்டிருக்காதீர்கள்.

தினமும் இது மாதிரி நேரத்திலே கொஞ்சம் உடற்பயிற்சி செய்யுங்கள். போயிடும்!மூக்கு முன்னாடி இருக்கிறதினாலே முன் கோபத்தையும் மூக்கு மேலே கோபம் என்று சொன்னவங்க போல இருக்கு! முன்கோபம் என்றால் என்ன?

எல்லாத்தையும் பின்னுக்குத் தள்ளிவிட்டு அது முந்திக் கொண்டு வந்துடுது! அதனாலே தான் அது முன் கோபம்!

அப்படி "மூடனுக்குத்தான் வரும்!" ங்குறது பழமொழி. அதுதான் "மூடனுக்குக் கோபம் மூக்கு மேலே!". அது மட்டுமல்ல...சில பேருக்கு மூக்கிலே எதுவும் பட்டா உடனே கோபம் வந்துடும்! ஒரு பெரியவர் "வாக்கிங்" போய்க் கொண்டிருந்தார். அவருக்கு முன்னால் இன்னொருத்தர் வாக்கிங் போய்க் கொண்டிருந்தார். முன்னாலே போய்க் கொண்டிருந்தவர் கையிலே ஒரு நீளமான "வாக்கிங் ஸ்டிக்!". அந்த வாக்கிங் ஸ்டிக்கை வேகமா முன்னாடியும் வீசிக் கொண்டே அவர் நடந்து போய்க்கிட்டிருந்தார்.

அதிலே என்ன ஆச்சின்னா, அந்த குச்சி வேகமா ஆடும்போது பின்னாடி வந்து கொண்டிருந்தவருக்கு கஷ்டமாய் போய்விட்டது. அதுவும் எந்த அளவுக்கு?

பின்னாடி வந்து கொண்டிருந்தவர் முகத்திலே போய் இடிக்கிற அளவுக்கு ஆகிவிட்டது! அவ்வளவு வேகமா வீசிக் கொண்டு போனாரு அவர்!பின்னாடி வந்தவரும் கொஞ்சம் பொறுமையாத்தான் வந்து கொண்டிருந்தார். இருந்தாலும் அந்த குச்சி அவர் மூக்கிலே வந்து இடிக்க ஆரம்பித்ததும் அவராலே பொறுத்துக் கொள்ள முடியவில்லை. முன்னாடி போறவரைப் பார்த்து சொன்னார்!

"இதோ பாருங்க! "வாக்கிங் ஸ்டிக்"கை இவ்வளவு வேகமா வீசாதீர்கள். அது என் மூக்கிலே வந்து இடிக்குது!" என்னார்.இதுக்கு அவர் "அப்படியெல்லாம் சொல்லாதீர்கள். வீசுறது என்னோட உரிமை! சுதந்திரம்!. இப்படி தனிமனித சுதந்திரத்தில் நீங்க தலையிடுவது நியாயமில்லை!" அப்படின்னாரு. இதைக் கேட்டதும் பின்னாடி வந்தவர் சொன்னார்.நீங்க சொல்றது சரி தாங்க. இருந்தாலும் Your Personal Liberty ends where my nose starts!" உங்க தனிமனித சுதந்திரம் என் மூக்கு ஆரம்பிக்கிற இடத்தோட முடிஞ்சி போகுது" அப்படி என்றார்.

"அவ்வளவுதான்!"முன்னாடி போனவர் சிரிச்சிக்கிட்டே கொஞ்சம் வேகமா நடைபோட ஆரம்பித்தார். மூக்கு மேலே கைத்தடி பட்டாக் கூட அவருக்கு ஏன் மூக்கு மேலே கோபம் வரவில்லை. அவர் பெரியவர்!

அதனாலேதான் கோபப்படாமல் பக்குவமா இப்படி சொன்னார். வேற சாதாரண மனுஷனா இருந்தா இவன் பதிலுக்கு ஒரு குச்சியை எடுத்துக்கிட்டு அவரு மூக்கிலே இடிச்சிருப்பான். விவகாரம் முத்தி போயிருக்கும். அப்புறம் இரண்டு பேருமே மூக்கில "பண்டேஜ்" ஜோட வோக்கிங் போவதைப் போல ஆகிவிடும்!

அப்புறம் அரசாங்கம் "வாக்கிங் ஸ்டிக்" வச்சிருக்கிறவர்கள் எல்லாம் "லைசன்ஸ்" வாங்கணும் என்று சொன்னாலும் சொல்லும்! துப்பாக்கி, கத்தி, சைக்கிள் செயின் இந்த லிஸ்டிலே வாக்கிங் ஸ்டிக்கும் சேர்ந்து விடும்.ஏன் சார்? Personal Liberty என்று பேசுகிறோமே தனிமனித சுதந்திரம் தேவைதான். வேண்டாம் என்று சொல்ல வில்லை.

ஆனா அதற்காக அடுத்தவங்க மூக்கை உடைக்கிற அளவுக்குப் போனா அது நியாயமா?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கடலட்டை பிடித்த 12 பேர் கைது



(மன்னார்)

ஒலைத்தொடுவாய் கடற்பரப்பில் சட்டவிரோதமாக இரவு நேர கடலட்டை தொழிலில் ஈடுபட்ட 12 பேர் கடற்படையினரால் நேற்று முன்தினம் அதிகாலை கைது செய்யப்பட்டுள்ளனர்.

ஓலைத் தொடுவாய் கடற் பகுதியில் சட்டவிரோதமான முறையில் இரவு நீரில் மூழ்கி கடலட்டை பிடித்துக் கொண்டிருந்த நிலையில் 12 பேரை கடற்படையினர் கைது செய்துள்ளனர்.

இதன் போது 4 படகுகள், டைவிங் கருவிகள் மற்றும் சட்டவிரோதமாக பிடிக்கப்பட்ட சுமார் 968 கடலட்டைகளும் 34 சங்குகளும் கைப்பற்றப்பட்டன.

இது தொடர்பில் மேலதிக சட்ட நடவடிக்கைகளை மன்னார் கடற்றொழில் திணைக்கள அதிகாரிகள் மேற்கொண்டு வருகின்றனர். (நி-5-6-285)

# 18 இந்திய மீனவர்கள் விளக்கமறியலில்

(மன்னார்)

இலங்கை கடற்பரப்பிற்குள் அத்துமீறி உள்நுழைந்து மீன்பிடியில் ஈடுபட்ட 18 இந்திய மீனவர்களையும் எதிர்வரும் 31ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்க மன்னார் நீதிவான் நேற்று முன் தினம் மாலை உத்தரவிட்டார்.

மன்னார் தாழ்வுபாடு கடல் பகுதியை அண்மித்த கடற்பரப்புக்குள் சட்டவிரோதமாக உள்நுழைந்து இரண்டு டோலர் படகுகளில் மீன் பிடியில் ஈடுபட்ட 18 தமிழக கடற்றொழிலாளர்கள் இவ்வாறு கடற்படையினரால் கைது செய்யப்பட்டனர்.கைதான 18 கடற்றொழிலாளர்களும் அவர்கள் பயன்படுத்திய இரண்டு டோலர் படகுகளும் கடற்படையினரால் தாழ்வுபாடு கடற்படை முகாமிற்கு கொண்டு வரப்பட்டன.

அதன்பின்னர் 18 கடற்றொழிலாளர்களும் மன்னார் மாவட்ட கடற்றொழில் நீரியல் வளத் திணைக்கள அதிகாரிகளிடம் ஒப்படைக்கப்பட்டனர்.

குறித்த அதிகாரிகள் நேற்று முன்தினம் மன்னார் நீதிவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தினர். இதன்போது விசாரணைகளை மேற்கொண்ட மன்னார் நீதிவான் குறித்த 18 இந்திய மீனவர்களையும் எதிர்வரும் 31 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்க உத்தரவிட்டார். (நி-5-6-285)

# பல லட்சம் பெறுமதியான சங்குகளுடன் மூவர் கைது



(மன்னார்)

எருக்கலம்பிட்டி பகுதியில் பல லட்சம் ரூபாய் பெறுமதியான சங்குகளுடன் மூவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

மன்னார் கடற்படைக்கு கிடைக்கப் பெற்ற இரகசிய தகவலின் பிரகாரம் மன்னார் பொலிஸ் குற்றப் புலனாய்வு பிரிவினருடன் இணைந்து எருக்கலம்பிட்டி பகுதியில் கடந்த திங்கட்கிழமை மேற்கொண்ட திடீர் சோதனை நடவடிக்கையின் போது பெண் உட்பட மூவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

குறித்த களஞ்சிய சாலை ஒன்றில் 20000 சங்குகளே களஞ்சியப்படுத்த அனுமதி காணப்பட்ட நிலையில் 30000 இற்கும் மேற்பட்ட அளவிலான சங்குகளும் வளர்சி நிலை அடையாத சங்குகளையும் களஞ்சியப்படுத்தியதன் அடிப்படையில் வீட்டின் உரிமையாளர் உட்பட பணியாளர்கள் இருவர் உள்ளடங்கலாக மூவர் கைது செய்யப்பட்டுள்ளனர். (நி-5-6285)

# மக்கள் எதிர்ப்பால் கைவிடப்பட்ட துயிலும் இல்ல காணி சுவீகரிப்பு


(நெளுக்குளம்)

**அளம்பில் மாவீரர் துயிலும் இல்ல காணி சுவீகரிப்பு நடவடிக்கை பொது மக்கள் எதிர்ப்பால் கைவிடப்பட்டது.**

முல்லைத்தீவு மாவட்டத்தின் அளம்பில் மாவீரர் துயிலும் இல்ல காணியை தனிநபரிடமிருந்து இராணுவத்துக்கு சுவீகரிப்பதற்கான நில அளவீட்டு பணி நேற்று இடம்பெறவிருந்த நிலையில் பொது மக்களால் குறித்த அளவீட்டு பணிகள் தடுத்து நிறுத்தப்பட்டுள்ளது.

முல்லைத்தீவு நில அளவை திணைக்கள அதிகாரிகள் நில அளவீட்டு பணிக்காக துயிலும் இல்ல காணிக்கு சென்றபோது அங்கு கூடிய மக்கள் இந்த இடத்தில் நாம் எமது உறவுகளை புதைத்துள்ளோம்.

இந்த காணியை அளவிட அனுமதிக்க மாட்டோம் என எதிர்ப்பு தெரிவித்ததையடுத்து அளவீட்டு பணிகள் நிறுத்தப்பட்டது.



குறித்த இடத்தில் மக்களுடன் இணைந்து முன்னாள் வட மாகாண சபை உறுப்பினர் துரைராசா ரவிகரன் மற்றும் சமூக செயற்பாட்டாளர் பீற்றர் இளஞ்செழியன் கலந்து கொண்டனர். (நி-5-6-299)

# கிராமங்களுக்கான உள்ளூர் பேருந்து சேவைகள் வேண்டும்

## பொதுமக்கள் கோரிக்கை

(அக்கராயன்)

பாரதிபுரம், மலையாளபுரம், பொன்நகர் போன்ற கிராமங்களுக்கு உள்ளூர் பேருந்து சேவைகளை ஏற்படுத்தி தருமாறு அப்பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

உள்ளூர் பேருந்து சேவைகள் இடம்பெறாததன் காரணமாக நீண்ட தூரம் நடந்து வந்தே ஏ-9 சாலையில் பயணிக்கின்ற பேருந்துகளில் பயணிக்க வேண்டிய நிலைமை காணப்படுகின்றது.

கிளிநொச்சி நகரத்தில் இருந்து உதயநகர், பாரதிபுரம், மலையாளபுரம், பொன்நகர், திருமுறிகண்டி ஆகிய கிராமங்களில் உள்ள குடும்பங்களின் போக்குவரத்து நலன்கருதி உள்ளூர் பேருந்து சேவைகள் நடத்துவதன் மூலம் அறிவியல் நகரில் உள்ள பல்கலைக்கழக மாணவர்களும் இலகுவாக போக்குவரத்தில் ஈடுபட முடியும் என அப் பகுதி மக்கள் தெரிவித்தனர்.

(நி-5-6-350)

# இயற்கை வேளாண்மை பயிலரங்கம்

(கிளிநொச்சி)

அகில இலங்கை காந்திசேவா சங்கமும் காந்தி நிலையமும் இணைந்து நடத்தும் ஒருநாள் இயற்கை வேளாண்மை பயிலரங்கம் நாளை கிளிநொச்சி கோணா வில் காந்தி கிராமத்தில் காலை 8.30 தொடக்கம் மாலை 4.30 வரை இடம் பெறவுள்ளது.

இந் நிகழ்வில் வளவாளர்களாக தமிழகத்தில் இருந்து இயற்கை வேளாண்மை வல்லுநர் பாமயன், இயற்கை வேளாண் பண்ணை ஆலோசகர் ராஜ கணேஸ் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (நி-5-6)

# 104 பானைகள் வைத்து இரணைமடுவில் பொங்கல்





(கண்டாவளை)

இரணைமடுக் குளத்தின் 104 ஆவது ஆண்டை முன்னிட்டு கனகாம்பிகை அம்மன் ஆலய முன்றலில் 104 பானைகள் வைத்து பொங்கல் நிகழ்வுகள் இடம்பெற்றன.

குறித்த பொங்கல் நிகழ்வில் சம்பிரதாயபூர்வமாக புதிர் எடுத்து வரப்பட்டதைத் தொடர்ந்து பூசை வழிபாடுகள் நடைபெற்றன. பிரதான பொங்கல் பானை ஏற்றப்பட்டதைத் தொடர்ந்து 104 பானைகளில் பொங்கல் நிகழ்வு இடம்பெற்றது.

தொடர்ந்து [illegible]ரிய கலை, கலாசார, விளையாட்டு நிகழ்வுகள் சிறப்புற நடைபெற்றன. மேலும் இந் நிகழ்வில் விவசாயிகளுக்கான மதிப்பளித்தல் நிகழ்வுகள், பரிசளிப்பு நிகழ்வுகள் இடம்பெற்றன.

இரணைமடு கமக்காரர் அமைப்புக்களின் சம்மேளன தலைவர் வி. நடராசா தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில், பிரதம அதிதியாக கிளி நொச்சி மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் எஸ். முரளிதரன் கலந்து கொண்டிருந்தார்.

(நி-[illegible])

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்கியின் பாகம் - 2

# பொன்னியின் செல்வன்

காவியத் தொடர் 382





அப்போது துஷ்டகமனு ஒரு யுக்தி செய்தான். ஏலேல சிங்கன் இருக்குமிடம் சென்று நேருக்கு நேர் நின்று, "அரசே! தங்களுடைய பெரிய சைன்யத்துக்கு முன்னால் என்னுடைய சிறிய படை சிதறி ஓடிவிட்டது. நான் ஒருவனே மிஞ்சியிருக்கிறேன். தாங்கள் சுத்த வீரர் குலத்தில் பிறந்தவர். ஆதலின் என்னுடன் தனித்து நின்று துவந்த யுத்தம் செய்யும்படி அழைக்கிறேன். நம்மில் வெற்றி அடைபவருக்கு இந்த இலங்கா ராஜ்யம் உரியதாகட்டும் மற்றவருக்கு வீரசொர்க்கம் கிடைக்கட்டும்!" என்று சொன்னான்.

துஷ்டகமனுவின் அத்தகைய துணிச்சலையும் வீரத்தையும் ஏலேல சிங்கன் மிக வியந்தான். ஆகையால் அவனுடன் தனித்து நின்று போர் செய்ய ஒப்புக்கொண்டான். இடையில் வந்து குறுக்கிட வேண்டாம் என்று தன் வீரர்களுக்குக் கண்டிப்பாகக் கட்டளையிட்டான். துவந்த யுத்தம் ஆரம்பமாயிற்று. இந்தச் செய்தியை அறிந்து சிதறி ஓடிய துஷ்டகமனுவின் வீரர்களும் திரும்பி வந்து சேர்ந்தார்கள். எல்லோரும் கண் கொட்டாமல் பார்த்துக் கொண்டிருந்தார்கள். நெடுநேரம் போர் நடந்தது. துஷ்டகமனுவோ தன் பிறப்புரிமையைப் பெறும் பொருட்டு ஆத்திரத்துடன் சண்டையிட்டான். ஏலேல சிங்கன் அந்த இளைஞனிடம் அனுதாபம் கொண்டிருந்தபடியால் பூரண வலியையும் உபயோகித்துப் போர் செய்யவில்லை. ஆகையால் ஏலேல சிங்கன் இறந்தான். துஷ்டகமனு முடிசூடியதும் ஏலேல சிங்கன் இறந்த இடத்தில் அவனுக்குப் பள்ளிப்படைக் கோயில் எழுப்பி அவனது வீரத்தையும் தயாளத்தையும் போற்றினான்.

இந்த அரிய சரித்திர நிகழ்ச்சியைச் சோழ வீரர்கள் இளங்கோ அருள்மொழிவர்மரின் முன்னிலையில் நடனக் கூத்தாக நடித்துக் காட்டினார்கள். ஆடலும் பாடலும் அமர்க்களப்பட்டன. ஏலேல சிங்கன் உயிர் துறந்து விழுந்த இடத்தில் நடித்த வீரன் உண்மையிலேயே செத்து விழுந்து விட்டானா என்று தோன்றும்படி அவ்வளவு தத்ரூபமாக நடித்தான். பார்த்துக் கொண்டிருந்த இளவரசரும் மற்ற வீரர்களும் அடிக்கடி 'ஆஹா' காரம் செய்து குதூகலித்தார்கள்.

நாடகம் நடந்து கொண்டிருந்தபோது ஒரு முறை இளவரசர் ஆழ்வார்க்கடியானைப் பார்த்து, "திருமலை! தம்பளைக் குகைக் கோயிலில் துஷ்டகமனுவுக்கும் ஏலேல சிங்கனுக்கும் நடந்த போர்க் காட்சியை அழியாத வர்ணச் சித்திரமாக வரைந்திருக்கிறதே, அந்தச் சித்திரத்தை நீங்கள் பார்த்தீர்களா?" என்று கேட்டார்.

"இல்லை, ஐயா! தம்பளை வீதிகளில் நாங்கள் வந்து கொண்டிருந்தபோதே தங்களைப் பார்த்துவிட்டேன். குகைக் கோயிலுக்குள் போக நேரமில்லை" என்றான் ஆழ்வார்க்கடியான்.

"ஆகா! அந்தக் குகைக் கோயில்களிலே உள்ள சிற்பங்களையும் அவசியம் பார்க்க வேண்டும்! திருமலை நம் செந்தமிழ் நாட்டில் எவ்வளவோ சிற்ப சித்திரங்கள் இருக்கின்றன. அவற்றைக் காட்டிலும் மகத்தான அற்புதங்கள் இந்த இலங்கைத் தீவில் இருக்கின்றன" என்றார் இளவரசர்.

"இளவரசே! இந்த நாட்டிலுள்ள சிற்ப சித்திரங்கள் எங்கும் போய் விடமாட்டா! எப்போது வேணுமானாலும் பார்த்துக்கொள்ளலாம். ஆனால் தங்களைப் பார்ப்பது அப்படியல்லவே? நல்ல சமயத்தில் நாங்கள் வந்ததினால் அல்லவோ பார்க்க முடிந்தது? எங்களுக்கு முன்னாலேயே இங்கு வந்த பார்த்திபேந்திர பல்லவன், தங்களைத் தேடி விட்டு 'இங்கே இல்லை' என்று திரும்பிப் போய்க் கொண்டிருந்தான். வழியில் அவனை நாங்கள் பார்த்தோம்" என்றான் ஆழ்வார்க்கடியான்.

"ஆம் என் தமையனாரின் அருமை நண்பர் வந்து தேடி விட்டுப் போனதாகத் தளபதி கூடச் சொன்னார். அவர் எதற்காக வந்திருப்பார் என்று உன்னால் ஊகித்துச் சொல்ல முடியுமா?" "நிச்சயமாகவே சொல்ல முடியும். தங்களைக் காஞ்சிக்கு அழைத்து வரும்படியாக ஆதித்த கரிகாலர் அவரை அனுப்பி வைத்திருக்கிறார்."

(தொடரும்...)



## சிறுவர் அரங்கம்

### சந்தேகப்பிராணி



வியாபாரத்தை முன்னிட்டு ஒரு தடவை முல்லா பெரிய நகரம் ஒன்றுக்குச் சென்றிருந்தார். அங்கே அவருக்கத் துணையாக ஒருவன் வந்து சேர்ந்தான்.

அவனுக்கு எடுத்ததற்கெல்லாம் சந்தேகமாக இருந்தது.

அந்தப் பெரிய நகரத்தை பார்த்ததும் அவனுக்குப் பிரமிப்பாக இருந்தது.

சந்து பொந்தெல்லாம் மக்கள் இவ்வாறு நிரம்பி வழிகிறார்களே, இவ்வளவு கூட்டத்தில் மக்கள் எவ்வாறு தாங்கள் போக வேண்டிய இடத்தை அடையாளம் கண்டு கொள்வார்கள்? தாங்கள் தங்கியுள்ள விடுதியை எவ்வாறு கண்டு பிடிப்பார்கள்? அவ்வளவு ஏன், மக்கள் தங்களைத் தாங்களே கூட அடையாளம் கண்டு கொள்வது சிரமந்தான் இவ்வாறெல்லாம் அந்த சந்தேகப்பிராணி பேசிக் கொண்டேயிருந்தான்.

அந்த சந்தேகப்பிராணியும் முல்லாவும் அன்று இரவைக் கழிப்பதற்காக ஒரு விடுதியில் சென்று தங்கினார்.

அந்த விடுதியில் பலர் தங்கியிருந்தார்கள்.

"காலையில் நான் கண் விழிக்கும் போது என்னையே மறந்து விட்டால் என்ன செய்வது? முல்லா அவர்களே எனக்கு ஒரு யோசனை சொல்லுங்கள் என்ற பரிதாபமாகக் கேட்டான்" சந்தேகப் பிராணி.

முல்லா சிரித்துக் கொண்டே "நண்பரே கவலைப்படாதீர். ஒரு கறுப்புத் துணியை உமது ஒரு காலில் சுற்றிக் கட்டி விடும்.

காலையில் உறங்கி எழுந்ததும் உமது காலைப் பாரும். கருப்புத் துணி காலில் இருந்தால் நீர் தான் அது என்று அடையாளம் கண்டு கொள்ளலாம்" என்றார்.

சந்தேகப் பிராணிக்கு அது நல்ல யோசனையாகப்படவே தன் காலில் ஒரு கறுப்புத் துணியைக் கட்டிக் கொண்டு படுத்து விட்டான்.

அவனுக்கு அருகே படுத்திருந்த முல்லா அவன் நன்றாக உறங்கிய பிறகு அவன் கட்டியிருந்த கறுப்புத் துணியை அவிழ்த்துத் தம்முடைய காலில் கட்டிக் கொண்டார்.

"ஐயோ நான் காணாமல் போய் விட்டேனே. என் காலில் இருந்த துணியைக் காணோமே" என்று கூக்குரல் போட்ட சந்தேகப் பிராணி முல்லாவின் காலைப் பார்த்து விட்டு "நான் அகப்பட்டுவிட்டேன் நீர் தான் நான் " என்று சத்தம் போட்டான்.

அங்கே ஏதோ குழப்பம் நடப்பதைக் கண்ட மற்ற பயணிகள் அங்கே வந்து கூடி என்ன நடந்தது என வினவினர்.

நடைபெற்ற நிகழ்ச்சிகளை முல்லா மற்றவர்களுக்கு விளக்கினார்.

சந்தேகப்' பிராணியைப் பார்த்து அந்த விடுதியில் தங்கியிருந்த எல்லா பிரயாணிகளும் வாய் விட்டுச் சிரித்தனர்.

பிறகு முல்லா அந்தச் சந்தேகப்பிராணிக்கு ஏற்பட்டிருந்த சந்தேகப்பிரமையை அகற்றி அவனுக்குத் தெளிவை உண்டாக்கினார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மையை உறுதியாகக் கடைப்பிடிப்பதில் இருந்துதான் வலிமை எல்லாம் கிடைக்கிறது.

*– காந்திஜி*

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## குற்றவாளியை விடுவித்த குற்றவாளியை கைது செய்க!

*மயிர்நீப்பின் வாழாக் கவரிமா அன்னார்*
*உயிர்நீப்பர் மானம் வரின்*

என்றான் வள்ளுவன்.

எல்லாக் குறளையும் எல்லோருக்கும் கூறிய வள்ளுவன் இந்தக் குறளை மட்டும் மான முள்ளவர்களுக்குக் கூறிவைத்தான்.

ஆம், கவரிமான் எங்ஙனம் தனது உடலில் ஒரு மயிரை இழந்தாலும் வாழாதோ. அது போல கௌரவமானவர்கள் தமது மானத்துக்குப் பங்கம் வந்துவிட்டால் அவர்கள் உயிர்வாழ மாட்டார்கள் என்பது மேற்படி குறளின் பொருள்.

ஆக, கௌரவத்தைப் பற்றி இம்மியும் சிந்திக்காதவர்கள் – எப்படியும் வாழலாம் என்று நினைப்பவர்களுக்கு இக்குறள் பொருந்தாது.

தவிர, இந்தக் குறளை வள்ளுவன் கூறியது மானம் போனால் உயிர் துறக்க வேண்டுமென்பதற்காகவல்ல.

மாறாக, தமது மானத்துக்குப் பங்கம் வந்துவிடாமல் பார்த்துக் கொள்ள வேண்டும். அப்போதுதான் மனித வாழ்க்கை அர்த்த முடையதாக இருக்கும் என்ற நோக்கிலேயே வள்ளுவன் மேற்படி குறளை புகன்றான்.

இந்தக் குறளை நினைக்கும்போதுதான் எங்கள் நாட்டின் கடந்த காலத்து ஆட்சியில் இருந்த ராஜபக்ஷக்களின் நினைவு வருகிறது.

அதாவது இந்த நாட்டின் பொருளாதார நெருக்கடிக்குக் காரணம் மகிந்த ராஜபக்ஷ, கோட்டாபய ராஜபக்ஷ, பசில் ராஜபக்ஷ என உயர்நீதிமன்றம் தனது தீர்ப்பை பகிரங்கப் படுத்தியுள்ளது.

இவ்வாறு நீதிமன்றம் தீர்ப்பை அறிவித்த போது, அவர்கள் கௌரவம்மிக்கவர்களாக இருந்தால் நிச்சயம் தாங்கள் கபளீகரம் செய்த சொத்துக்களை மீளவும் இந்த நாட்டு அரசாங்கத்திடம் ஒப்படைத்துவிட்டு ஒதுங்கியிருக்க வேண்டும்.

ஆனால் அவர்கள் அதுபற்றி இம்மியும் சிந்திக்கவில்லை.

மாறாக அடுத்த தேர்தலில் தங்கள் சார்பில் யார் போட்டியிடுவது என்ற சிந்தனையில் அவர்கள் இருப்பது தெரிகிறது.

இதுதான் என்றால் இல்லை. கோட்டாபய ராஜபக்ஷ ஜனாதிபதியாக இருந்தபோது, நீதிமன்றத்தால் குற்றவாளியென சிறைத்தண்டனை விதிக்கப்பட்ட துமிந்த சில்வாவுக்கு பொதுமன்னிப்பு வழங்கியிருந்தார்.

இவ்வாறு கோட்டாபய ராஜபக்ஷ பொது மன்னிப்பு வழங்கியது தவறு என உயர் நீதிமன்றம் அறிவித்துள்ளது.

ஆக, ஒரு ஜனாதிபதியாக இருந்து கொண்டு குற்றவாளிக்கு நீதிமன்றம் வழங்கிய தண்டனையின் தன்மை பற்றி இம்மியும் ஆராயாமல், தனக்கு வேண்டியவர் என்ற ஒரே காரணத்துக்காக, அவருக்கு மன்னிப்பு வழங்கினார். அது தவறு என்பது உயர்நீதிமன்றத்தின் தீர்ப்பு.

ஆம், உயர்நீதிமன்றம் இவ்வாறு தீர்ப்பு வழங்கிய பின்பும் நாட்டின் நலனுக்காகவே துமிந்தவுக்குப் பொதுமன்னிப்பு வழங்கினேன் என முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ விளக்கம் கொடுக்கிறார் எனில், மயிர் நீப்பின் வாழாக் கவரிமான் அன்னார்... என்ற குறள் அவருக்குப் பொருந்தாது எனலாம்.

எதுஎவ்வாறாயினும் குற்றவாளியாக நீதிமன்றத்தால் இனங்காணப்பட்ட ஒருவருக்கு பொதுமன்னிப்பு வழங்குகிறார் எனில், அந்தக் குற்றத்துக்கும் பொது மன்னிப்பு வழங்கியவருக்கும் தொடர்பு உண்டா? என்ற கோணத்திலும்

குற்றவாளிக்கு பொதுமன்னிப்பு வழங்குவது, தனக்கு கிடைக்கப்பெற்ற அதிகாரத்தைத் துஷ்பிரயோகம் செய்வதற்கு ஒப்பானது என்ற அடிப்படையிலும் கோட்டாபய ராஜபக்ஷவை கைது செய்து அவரை விசாரிக்க வேண்டும். அப்போதுதான் உயர்நீதிமன்றத் தீர்ப்பு மற்றவர்களுக்குப்படிப்பினையாக அமையும்.

# திட்ட முன்மொழிவுகளை சமர்ப்பித்தால் சுயதொழில் முயற்சியாளர்களுக்கு உதவி

## அமைச்சர் டக்ளஸ்

(யாழ்ப்பாணம்)

உள்ளூர் உற்பத்திகளை மேம்படுத்துவதற்கான முதலீடுகளை எதிர்பார்க்கின்ற சுயதொழில் முயற்சியாளர்கள் அதற்கான திட்ட முன்மொழிவுகளை சமர்ப்பிக்கும் பட்சத்தில் அதற்கான ஒத்துழைப்பினையும் வழிகாட்டல்களையும் வழங்க முடியும் என கடற்தொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

யாழ்.மாவட்ட செயலகத்தில் நேற்று வியாழக்கிழமை சுயதொழில் முயற்சியாளர்களுடன் இடம்பெற்ற சந்திப்பின் போதே இவ்வாறு தெரிவித்தார்.

குறித்த சந்திப்பில், மாவட்டத்தில் சுயதொழில் முயற்சிகளை விருத்தி செய்வதன் ஊடாக உள்ளூர் உற்பத்திகளை மேம்படுத்தி சுயதொழில் முயற்சியாளர்களின் சுய பொருளாதாரத்தினை வலுப்படுத்துவதன் ஊடாக நாட்டின் பொருளாதார வளர்ச்சியினை மேம்படுத்துவதற்கு ஏதுவான விடயங்கள் ஆராயப்பட்டன.

அதன்போது, சுயதொழில் முயற்சியாளர்கள் தாம் எதிர்நோக்கியுள்ள தொழில்சார் நடைமுறை பிரச்சினைகளையும் மற்றும் வங்கிகள் ஊடாக கடன் வசதிகளை பெற முற்படும் போது இறுக்கமான நடைமுறைகளால் ஏற்படும் தாமதங்கள் குறித்து சுட்டிக்காட்டினார்.

அதற்கு பதில் அளிக்கும் வகையில் அமைச்சர் கருத்து தெரிவிக்கும் போது,

உள்ளூர் உற்பத்திகளை மேம்படுத்துவதற்கான முதலீடுகளை எதிர்பார்க்கின்ற சுயதொழில் முயற்சியாளர்கள் அதற்கான திட்ட முன்மொழிவுகளை சமர்ப்பிக்கும் பட்சத்தில் அதற்கான ஒத்துழைப்பினையும் வழிகாட்டல்களையும் வழங்க முடியும்.

சிறிய மற்றும் நடுத்தர கைத்தொழில்முயற்சிகளை ஊக்குவிப்பதற்கு வரவு செலவுத் திட்டத்தில் ஒதுக்கப்பட்டுள்ள நிதியில் இருந்து நன்மைகளை பெற்றுக் கொள்வதற்கான முன்மொழிவுகளையும் வழங்க முடியும் என தெரிவித்தார்.

இக் கலந்துரையாடலில் மாவட்ட செயலர், மேலதிக செயலர், மேலதிக செயலர் (காணி) மாவட்டச் செயலக பதவி நிலை உத்தியோகத்தர்கள், சுயதொழில் முயற்சி அபிவிருத்தி பிரிவின் உத்தியோகத்தர்கள், வங்கிகளின் முகாமையாளர்கள் மற்றும் சுயதொழில் முயற்சியாளர்கள் கலந்துகொண்டிருந்தனர். (ம-7)

### ஜனாதிபதி வேட்பாளர் தொடர்பில்

# தம்மிக்க பெரேராவுடன் எந்தவித உடன்பாடும் இல்லை - பிரசன்ன

(மாத்தறை)

ஜனாதிபதி வேட்பாளர் தொடர்பில் பாராளுமன்ற உறுப்பினர் தம்மிக்க பெரேராவுக்கும் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவுக்கும் இடையில் எந்தவொரு உடன்பாடும் செய்து கொள்ளப்படவில்லை என அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தெரிவித்துள்ளார்.

அனுபவமற்ற ஜனாதிபதியை நியமித்து நாட்டை மீண்டும் சிக்கலில் தள்ள முடியாது எனவும் அமைச்சர் பிரசன்ன ரணதுங்க கூறியுள்ளார்.

மாத்தறை மாவட்ட ஒருங்கிணைப்புக் குழு கூட்டத்தின் பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய அவர்,

நான் பொதுஜன பெரமுனவின் அங்கத்தவர். எனக்குத் தெரிந்தவரையில் தம்மிக்க பெரேராவுடன் ஜனாதிபதி வேட்பாளர் தொடர்பில் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன எந்தவொரு உடன்படிக்கையையும் மேற்கொள்ளவில்லை.

ஜனாதிபதி வேட்பாளரை நிறுத்துவது தொடர்பில் பொதுஜன பெரமுன இன்னும் தீர்மானம் எடுக்கவில்லை. ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க போட்டியிடும் பட்சத்தில் அவருக்கு பொதுஜன பெரமுன மீண்டும் ஒரு சந்தர்ப்பத்தை வழங்க வேண்டும். எனவும் அவர் சுட்டிக்காட்டினார்.

பொதுஜன பெரமுனவின் ஜனாதிபதி வேட்பாளராக களமிறங்க பிரபல வர்த்தகர் தம்மிக்க பெரேரா முயற்சிகளை எடுத்துவரும் பின் புலத்திலேயே அமைச்சர் பிரசன்ன ரணதுங்க இந்த அறிவிப்பை வெளியிட்டுள்ளார்.

இதேவேளை, பொதுஜன பெரமுனவின் முன்னாள் தேசிய அமைப்பாளர் பசில் ராஜபக்சவுக்கும் தம்மிக்க பெரேராவுக்கும் இடையில் உடன்படிக்கையொன்று செய்து கொள்ளப்பட்டுள்ளதாக கடந்தகாலத்தில் செய்திகள் வெளியாகியிருந்தமையும் குறிப்பிடத்தக்கது. (ம-7)

### எதிர்வரும் 20,21 ஆம் திகதிகளில்

# சிறுவர்களுக்கு தட்டம்மை தடுப்பூசி

(கொழும்பு)

இதுவரை தட்டம்மை தடுப்பூசி செலுத்தப்படாத சிறுவர்களுக்கு எதிர்வரும் 20ஆம் மற்றும் 21ஆம் திகதிகளில் தடுப்பூசி செலுத்தும் வேலைத்திட்டம் முன்னெடுக்கப்படவுள்ளதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

சுகாதார மேம்பாட்டு பணியகத்தில் இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் கலந்துகொண்ட அதன் பிரதிப் பணிப்பாளர் நாயகம் எஸ்.எம். ஆர்னல்ட் இதனை தெரிவித்துள்ளார். 9 மாதங்கள் முதல் 15 வயது வரையிலான சிறுவர்களுக்கு குறித்த தடுப்பூசி செலுத்தப்படும் என அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

அத்துடன், 6 மாதம் முதல் 9 மாதங்களுக்கு இடைப்பட்ட குழந்தைகளுக்கான தட்டம்மை தடுப்பூசியும் எதிர்வரும் 20 ஆம் மற்றும் 21ஆம் திகதிகளில் செலுத்தப்படும்.

அருகில் உள்ள சுகாதார வைத்திய அதிகாரி காரியாலயங்களுக்கு சென்று குறித்த தடுப்பூசிகளை பெற்றுக்கொள்ள முடியும் என அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார். (ம-7)

# வைத்திய நிபுணர் கைதாகி மறியலில்

(கொழும்பு)

கராப்பிட்டிய போதனா வைத்தியசாலையில் பணிபுரியும் பெண் ஊழியர் ஒருவரை தாக்கிய குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட சிரேஷ்ட புற்றுநோயியல் நிபுணர் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

அதன்படி, காலி நீதவான் நீதிமன்றத்தின் உத்தரவின் கீழ் அவர் எதிர்வரும் 22 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

நேற்று முன்தினம் புதன்கிழமை ஏற்பட்ட சர்ச்சைக்குரிய சூழ்நிலையின் போது, கராப்பிட்டிய போதனா வைத்தியசாலையில் பணிபுரியும் பெண் கனிஷ்ட ஊழியர் ஒருவரை தாக்கிய குற்றச்சாட்டில் அவர் நேற்று கைது செய்யப்பட்டிருந்தது குறிப்பிடத்தக்கது. (ம-7)

# துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்கான சாரதி உயிரிழப்பு

## பொலிஸ் உப பரிசோதகர் கைது

(கொழும்பு)

பொலிஸ் உப பரிசோதகர் ஒருவரின் துப்பாக்கி தவறுதலாக இயங்கியதில் லொறி சாரதி ஒருவர் உயிரிழந்துள்ளார்.

இச்சம்பவம் நேற்று மாலை தம்பெலஸ்ஸ பிரதேசத்தில் இடம்பெற்றுள்ளது.

நாரம்மல பகுதியில் பொலிஸாரின் உத்தரவை மீறிச் சென்ற சிறிய ரக லொறி ஒன்றை பொலிஸார் துரத்திச் சென்று தடுத்து நிறுத்தியுள்ளனர்.

பின்னர், லொறியின் சாரதியை சோதனை செய்தபோது, பொலிஸ் உப பரிசோதகரின் துப்பாக்கி இயங்கியதில் சாரதி துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி உயிரிழந்துள்ளார். (ம-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இலங்கை நாணயத்தின் வரலாறும் அரசியலும்

## முதலிரு மேற்கத்தய ஆட்சியாளர் காலகட்டம் - பகுதி-III

**கலாநிதி க.தவலிங்கம்**
ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்.
தவிசாளர்- எல்லை நிர்ணய ஆணைக்குழு.

03

வர்த்தகம் அமைக்கவும் ஐந்து களஞ்சியம் குருமார் தெளி ஒன்றை சமயம் போதிக்கவும் கள்ளிக் கோட்டை மன்னனிடமிருந்து அனுமதி பெறும்படி வாஸ்கொடகாமாவிற்கும் இந்தியாவுக்கு வந்த இரண்டாவது கடற்படைக் குழுவினருக்கும் போர்த்துக்கல்லிலிருந்து அறிவுரை வழங்கப்பட்டது. தமது அதிகாரம் பரவும் பிரதேசங்களில் தமது சமயத்தைப் பரப்புதல் ஆரம்பத்தில் இருந்தே போர்த்துக்கேயரின் நோக்கமாக இருந்தமை இதிலிருந்து தெளிவாகிறது.

**வாஸ்கொடகாமாவின் இந்தியப் பயணத்தின் விளைவுகள்**

வாஸ்கொடகாமாவின் இந்தியப் பயணத்தின் விளைவாக, ஐரோப்பா மற்றும் தூரக்கிழக்கு நாடுகளுக்கிடையேயான ஒரு நேரடி கடல் வழித்தடம் அமைந்தது. இதன் காரணமாக, எண்ணற்ற நாடுகள் பெரும் பயனடைந்தன. இது வாஸ்கொடகாமா கடல்வழிப்பயணத்தின் அடிப்படை முக்கியத்துவமாக இருந்தது.

இந்தப் பயணத்தால் போர்த்துக்கல் நாட்டிற்கு குறுகிய காலத்தில் அதிகம் பயன் கிடைத்தது. கீழை நாடுகளுக்கான புதிய கடல் வணிக வழித்தடத்தைப் போர்த்துக்கல் கட்டுப்படுத்தியது. அதன் மூலம், நாகரிக உலகின் எல்லையோரத்தில் மிகவும் ஏழை நாடாக இருந்து வந்த இந்த நாடு. ஐரோப்பாவிலேயே மிகவும் செல்வச் செழிப்பு மிக்க நாடுகளில் ஒன்றாக மிக விரைவில் முன்னேறியது.

அத்துடன் இந்தியப் பெருங் கடலைச் சுற்றிக் கணிசமான எண்ணிக்கையில் குடியேற்றங்களையும் துரிதமாகப் போர்த்துக்கல் நிறுவியது. இந்தியாவிலும் இந்தோனேசியாவிலும் மடகாஸ்கரிலும் ஆபிரிக்காவின் கிழக்குக் கடற்கரையிலும் வேறு பல பகுதிகளிலும் போர்த்துக்கலுக்குப் புறக்காவற் படைத்தளங்களும் நிறுவப் பெற்றன.

இவை தவிர, பிரேசிலும் மேற்கு ஆபிரிக்காவிலும் போர்த்துக்கலுக்குக் குடியேற்றங்கள் இருந்து வந்தன. இக்குடியேற்றங்களை இவரது பயணங்களுக்கு முன்னரே போர்த்துக்கேயர் நிறுவியிருந்தனர். இந்தக் குடியேற்றங்களில் பெரும்பாலானவற்றை இருபதாம் நூற்றாண்டின் கடைசிப் பிற்பாதி வரையிலும் போர்த்துகல் விடாது வைத்திருந்தது.

இந்தியாவுக்கு வாஸ்கொடகாமா புதிய கடல் வாணிக வழித்தடத்தை ஏற்படுத்தியதன் விளைவாக, இந்தியப் பெருங்கடலின் வாணிக வழித்தடங்களில் அது நாள் வரை ஆதிக்கம் செலுத்தி வந்த இஸ்லாமியர்களுக்குப் பெரும் பின்னடைவு ஏற்பட்டது. இஸ்லாமிய வணிகர்கள் ஒடுக்கப்பட்டனர். மேலும், அவர்களுடைய இடத்தைப் போர்த்துக்கேயர்கள் கைப்பற்றி கொண்டனர்.

அதுமட்டுமின்றி, இந்தியாவுக்கும் ஐரோப்பாவுக்கும் இடையிலான நில வழி வணிகத் தடங்கள் பயனற்றுப் போயின. ஏனெனில், ஆபிரிக்காவைச் சுற்றிச் செல்லும் போர்த்துக்கேய கடல் வழித்தடம் எளிதாகவும் மலிவாகவும் இருந்தது.

இது, கீழை நாடுகளுக்கான வாணிக வழித்தடங்களைக் கட்டுப்படுத்தி வந்த ஓட்டோமான் துருக்கியர்களுக்கும் பேரிடியாக அமைந்தது. ஏனென்றால், எஞ்சிய ஐரோப்பியப்பகுதிகளுக்குப் புதிய கடல் வாணிக வழித்தடம் மூலம் தூர நாடுகளிலிருந்து சரக்குகள் வருவது முன்பைவிட மலிவாக இருந்தது.

எனினும், வாஸ்கொடகாமாவின் பயணத்தினால்,இந்தியா மற்றும் தென்கிழக்கு ஆசியாவில் அதிக பாதிப்புகள் ஏற்பட்டன. 1498 ஆம் ஆண்டுக்கு முன்பு, இந்தியா ஐரோப்பாவின் தொடர்பின்றி தனிமைப்பட்டுக் காணப்பட்டது. உண்மையைக் கூறின், வரலாற்றின் பெரும் பகுதியில் ஓரளவு தன்னிறைவுடைய ஒரு தனி நாடாகவும் இந்தியா இயங்கி வந்தது.

அவ்வப்போது, வடமேற்கிலிருந்து மட்டுமே சில அயல் நாட்டுப் பாதிப்புகள் ஏற்பட்டன. ஆயினும், வாஸ்கொடகாமாவின் பயணத்தால் ஏற்பட்ட கடல் வழித்தடத்தின் வாயிலாக, ஐரோப்பிய நாகரிகத்துடன் இந்தியாவுக்கு நேரடித் தொடர்பு உண்டாயிற்று. ஐரோப்பியரின் செல்வாக்கும் வலிமையும் இந்தியாவில் படிப்படியாக வளர்ந்து வந்தது.

பத்தொன்பதாம் நூற்றாண்டின் கடைசிப் பிற்பாதிக்குள் இந்தியத் துணைக் கண்டம் முழுவதுமே பிரிட்டிஷ் குடியரசின் கீழ் அடிமைப் பட்டது. (வரலாற்றில் இந்தியா முழுவதும் ஒரே ஆட்சியாளரின் கீழ் ஒரு குடையில் இருந்தது. இந்தக் காலத்தின் போது தான் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது).

இந்தோனேசியாவைப் பொறுத்தவரையில் முதலில் அது ஐரோப்பியச் செல்வாக்குக்கு ஆட்பட்டது. பிறகு, அது முழுமையாக ஐரோப்பிய ஆதிக்கத்தின் கீழ் வந்தது. இருபதாம் நூற்றாண்டின் மத்தியில் தான் இந்தப் பகுதிகளையும் சுதந்திரம் பெற்றன.

குறைந்த காலத்திலேயே இவர் வைசிராய் என்ற பெயரில் 1524 ஆம் ஆண்டு போர்த்துக்கேய ஆளுமைக்கு உட்பட்ட இந்தியாவின் ஆளுநர் ஆனார். 1524 இல் தனது மூன்றாவது கடல் பயணத்தை வாஸ்கொடகாமா இந்தியாவுக்குத் துவக்கினார். 1524 செப்டெம்பரில் கொச்சிக்கு வந்தார். அச்சமயத்தில் கழுத்தைச் சுற்றிக் கொப்புளங்கள் உண்டாகி தலையை அசைக்க முடியாமல் அவதிப்பட்டார்.

1524 டிசெம்பர்25 இல் கொச்சியில் இறந்தார். அவரது உடல் பின்னர் அங்கு அடக்கம் செய்ய போர்த்துக்கலுக்கு கொண்டு செல்லப்பட்டது. ஆனாலும் அவர் பெயரில் கோவாவில் இன்றும் பல நினைவுச் சின்னங்கள், இரயில் நிலையம் போன்றவை உள்ளன.

**கோட்டை இராச்சியமும் போர்த்துக்கேயரும்**

இலங்கை இந்து சமுத்திரத்தின் கடல் வழியில் முக்கிய மத்திய நிலையமாக அமைந்துள்ளதால் ஐரோப்பியரின் ஆசிய செயற்பாடுகளின் வர்த்தக, யுத்த நடவடிக்கைகளில் இலங்கை முக்கிய இடம் பெற்றிருந்தது. ஆரம்பத்தில் போர்த்துக்கேய ராவ் செய்லோன் என அறிமுகமான இலங்கையில் உயர்ரசுக் கறுவா உற்பத்தி செய்யப்படுவதாக அவர்கள் அறிந்திருந்தனர்.

இதனால் இந்தியாவுக்கு வந்து சிறிது காலத்தில் போர்த்துக்கேயர் இலங்கை மீது கவனம் செலுத்தினர். 1505 ஆம் ஆண்டு மார்ச் மாதம் போர்த்துக்கேய மன்னனால் கிழக்கு நாடுகளின் இராசப்பிரதிநிதியாகப் பிரான்சிஸ்கோ டி அல்மேடா என்பவன் நியமிக்கப்பட்டான். போர்த்துக்கேய மன்னனால் இராசப் பிரதிநிதிக்கு வழங்கப்பட்ட அறிவுரைகளில் இலங்கையைக் கண்டுபிடிக்க வேண்டும் என்பதும் ஒன்றாகும். பிரான்ஸிஸ் அல்மேடாவின் மகனான லோரேன்சோ டி அல்மேடா பயணித்த கப்பல் புயல் காற்றினால் தாக்குண்டு எதிர்பாராதவிதமாக இலங்கையை அடைந்தது. இதன் மூலம் போர்த்துக்கேய மன்னனின் குறிக்கோள் நிறைவேறியது.

போர்த்துக்கேயர் இலங்கைக்கு வந்த போது கோட்டையின் அரசனாக இருந்த எட்டாம் வீரபராக்கிரமபாகு வயோதிபனாக இருந்தான். அவனுடைய புதல்வர்களான தர்ம பராக்கிரமபாகு, விஜயபாகு ஆகியோரும் வேறு புதல்வர்களும் இருந்தனர். இளவரசனான தர்ம பராக்கிரமபாகு அரசனுக்கு உதவியாகக் கோட்டையின் நிருவாகத்தை நடத்தினான். ஏனையோர் இராச்சியத்தின் ஏனைய பிரதேசங்களுக்குப் பொறுப்பாக இருந்தனர்.

**போர்த்துக்கேயர் கோட்டை மன்னனுடன் தொடர்பு**

கோட்டை மன்னனுடன் தொடர்பு கொள்ள விரும்பிய போர்த்துக்கேயருக்கு இஸ்லாமியர் கோட்டை மன்னனின் இருப்பிடம் தொடர்பான தகவல்களை அளிக்க மறுத்துவிட்டனர். எனினும், போர்த்துக்கேயரின் வருகை கோட்டை மன்னன் 9 ஆம் தர்மபராக்கிரமபாகுவிற்கு அறிவிக்கப்பட்டது. போர்த்துக்கேயர் பற்றி கீழ்க் கண்டவாறு மன்னனுக்கு விபரிக்கப்பட்டது.

"கொழும்புத்துறை முகத்தில் வெள்ளை நிறத்தோலைக் கொண்ட அழகான மனிதர்கள் காணப்படுகின்றார்கள். இவர்கள் இரும்பினாலான மார்புக்கவசமும் இரும்பினாலான தலைப் பாகையும் அணிந்து எந்த வேலையும் அங்கும் இங்குமாக நடந்து மிகவும் சுறுசுறுப்பாகவும் வேகமாகவும் செயற்படுகின்றார்கள். சிறுசிறு கற்றுண்டுகளை உண்டு (பாண்), இரத்தத்தைக் (வைன்) குடிக்கின்றார்கள். அவர்கள் பீரங்கிகள் எழுப்பும் முழக்கம் இடிமுழக்கத்தை விட அதிகம் சத்தமாயுள்ளது".

கொழும்புத் துறைமுகத்திற்கும் கோட்டை இராச்சியத்திற்கும் இடையில் நீண்டதூரம் இருப்பதாகக் காண்பிக்கும் பொருட்டு அரசனின் பிரதிநிதிகள் போர்த்துக்கேய பிரதிநிதிகளைச் சுற்றிவளைத்து அரசமாளிகைக்கு அழைத்துச் சென்றதாகக் கூறப்படுகின்றது. இதனை அடிப்படையாகக் கொண்டு பறங்கியர் கோட்டைக்குப்போனது. போல என்ற கூற்று மக்களிடையே வழக்கில் வந்தது.

**முதல் ஒப்பந்தம் கைச்சாத்து**

பேயோட சொய்சா என்பவனை ஹொறன்ஸோடி அல்மெய்டா தனது பிரதிநிதியாக கோட்டை மன்னனிடம் ஒப்பந்தப் பேச்சிற்கு அனுப்பினான். போர்த்துக்கேயர் கோட்டை மன்னனுடன் வாணிப ஒப்பந்தத்தை ஏகபோக உரிமையாகச் செய்து கொள்ள விரும்பினர். கோட்டை மன்னன் போர்த்துக்கேயருக்கு ஆண்டு தோறும் திறையாக 400 பஹார் கறுவா கொடுப்பதாகவும் இதற்குப் பதிலாக போர்த்துக்கேயர் கோட்டை மன்னனின் துறைமுகங்களை எதிரிகளிடமிருந்து காக்க வேண்டும் எனவும் இணக்கம் காணப்பட்டது.

(தொடரும்...)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## ரயில் விபத்து...

மாலை 4.30 மணியளவில் குறித்த விபத்து இடம்பெற்றுள்ளது.

அநுராதபுரத்திலிருந்து யாழ்ப்பாணம் நோக்கி பயணித்த யாழ்ராணி புகையிரதத்துடன் மோதுண்டே குறித்த விபத்து இடம்பெற்றுள்ளது.

குறித்த விபத்தில் முறிகண்டி பகுதியைச் சேர்ந்த 43 வயதுடைய கேதீஸ்வரன் விஜயானந்தன் எனும் 2 பிள்ளைகளின் தந்தையான டிப்பர் சாரதியே உயிரிழந்துள்ளார்.

பொலிஸ் விசாரணைகளின் பின்னர் உறவினர்களிடம் சடலம் கையளிக்கப்படவுள்ளதாக புகையிரத நிலைய அதிகாரிகள் தெரிவித்தனர்.

(ம-7,100,316)

## அரச ஊழியர்...

கட்ட நிதி விடுவிக்கப்பட்டுள்ளதாக நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாப்பிட்டிய தெரிவித்துள்ளார்.

இதற்கமைய அரச பணியாளர்களுக்கான வேதனத்தை செலுத்துவதற்காக இதுவரையில் ஒதுக்கப்பட்ட 95 பில்லியன் ரூபாவிற்கு மேலதிகமாக 14 பில்லியன் ரூபாய் விடுவிக்கப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.



















இதன்படி, குறித்த 10 ஆயிரம் ரூபாயில் 5 ஆயிரம் ரூபாய் இந்த மாதத்தில் இருந்து வழங்கப்படும்.

எதிர்வரும் ஏப்ரல் மாதத்தில் இருந்து குறித்த 10 ஆயிரம் ரூபாய், அரச பணியாளர்களின் வேதனத்துடன் இணைத்து வழங்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (ம-7)

## குடும்பங்களுக்கு...

ணிக்கை 5 ஆயிரம் என பணவியல், பொருளாதார ஸ்திரப்படுத்தல் மற்றும் தேசிய கொள்கை அமைச்சகம் குறிப்பிட்டுள்ளது.

அஸ்வெசும நலன்புரித் திட்டம் தொடர்பான 6 இலட்சத்து 40 ஆயிரம் ஆட்சேபனைகள் மற்றும் மேன்முறையீடுகளை பரிசீலித்ததன் பின்னர், புதிதாக 3 இலட்சம் குடும்பங்கள் அஸ்வெசுமவில் இணைவதற்கு தகுதி பெற்றுள்ளதாக பதில் நிதியமைச்சர் ஷெஹான் சேமசிங்க அறிக்கையொன்றை வெளியிட்டு குறிப்பிட்டுள்ளார். (ம-7)

## பிரபாகரனின்...

முதல் நாள் விடுதலைப் புலிகளின் தலைவரின் பெயர் பொறித்த கேக்கை வெட்டிய காரணத்திற்காகப் பயங்கரவாத தடை சட்டத்தின் கீழ் குறித்த பெண் கைது செய்யப்பட்டிருந்தார்.

மட்டக்களப்பு - மாவீரர் தின நாளில் உயிர் நீத்த உறவுகளுக்கு அஞ்சலி செலுத்திய பலர் கைது செய்யப்பட்டிருந்த நிலையில் விடுதலைப் புலிகளின் தலைவரின் பிறந்தநாளுக்கு கேக் வெட்டியதாக குறித்த பெண்ணும் பயங்கரவாத தடை சட்டத்தில் கைது செய்யப்பட்டிருந்தார்.

மேலும், கடந்த இரண்டு மாதங்களாக மட்டக்களப்பு சிறைச்சாலையில் வைக்கப்பட்டிருந்த குறித்த பெண் நேற்றைய தினம் மட்டக்களப்பு நீதவான் நீதிமன்றம் ஊடாக விடுதலையாகியுள்ளார். (ம-7)

## நவம்பர் 18...

தப்பட்டு வருகிறது. அரசாங்கம் தேர்தலை ஒத்திவைக்க முற்படுவதாக எதிர்க்கட்சிகள் குற்றச்சாட்டுக்களை சுமத்தியுள்ளன.

என்றாலும், தேர்தலை ஒத்திவைக்கும் நோக்கம் அரசாங்கத்துக்கு இல்லை என்றும் இவ்வருட இறுதியில் ஜனாதிபதித் தேர்தல் நடத்தப்படும் என்றும் ஜனாதிபதி அண்மையில் கூறியிருந்தார்.

இந்நிலையில், ஜனாதிபதித் தேர்தலை நடத்த கோரப்பட்ட நிதியை வரவு - செலவுத்திட்டத்தில் ஒதுக்கீடு செய்துள்ளதாக தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் சமன் ஸ்ரீ ரத்நாயக்க கூறியுள்ளார்.

ஜனாதிபதித் தேர்தலை நடத்துவதற்கு 10 பில்லியன் ரூபாய் செலவாகும் என மதிப்பிடப்பட்டுள்ளது. நவம்பர் 18ஆம் திகதிக்கு ஒரு மாதத்திற்கு முன்னர் தேர்தல் நடத்தப்படும் எனவும் அவர் கூறியுள்ளார்.

## சுற்றிவளைப்பை...

கொழும்பில் ஊடகங்களுக்கு யுக்திய சுற்றிவளைப்புத் தொடர்பாக கருத்துத் தெரிவித்தபோதே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார். இவ்விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

“சிறைச்சாலைகளில் கூட்ட நெரிசல் தொடர்பாக உரிய அதிகாரிகள் தான் கவனம் செலுத்த வேண்டும்.

அதைவிடுத்து, சிறைச்சாலைகளில் கூட்டம் அதிகரிக்கிறது என்பதற்காக யுக்திய சுற்றிவளைப்பு நடவடிக்கையை நிறுத்துமாறு யாரேனும் கோரினால், அது உண்மையில் நகைப்புக்குரிய விடயமாகவே பார்க்கப்படும்.

சிறைச்சாலைகளில் காணப்படும் நெரிசலைக் குறைக்கும் வகையில், புதிய சிறைச்சாலைகள் இரண்டை நிர்மாணிக்க உரிய இடத்தை அடையாளம் காணுமாறு ஜனாதிபதி தெரிவித்திருந்தார்.

உரிய ஆலோசனைகளைகளும் இதற்காக வழங்கப்பட்டுள்ளன. யுக்திய நடவடிக்கையானது, குடும்பங்களை பாதுகாக்கும் செயற்பாடாகும். பெற்றோரை, சமூகத்தை பாதுகாக்கும் ஒரு செயற்பாடாகும்.

யுக்திய செயற்பாட்டை யார் சொன்னாலும் நிறுத்தமாட்டோம். இதனை நிறுத்துமாறு ஜனாதிபதி பணிக்க மாட்டார் என நாம் உறுதியாக நம்புகிறோம்” என அமைச்சர் டிரான் அலஸ் மேலும் குறிப்பிட்டுள்ளார். (ம-7)

## அனைத்துப்...

நிலைமையில் இருப்பதால், மக்களிடம் நிதி மோசடியில் ஈடுபடும் நபர்களின் புகைப்படங்கள் விமான நிலையத்தில் ஏற்படுத்தப்பட்டுள்ள விசேட கமரா கட்டமைப்பில் உள்ளடக்கப்பட்டு காட்சிப்படுத்தப்படும் என பதில் பொலிஸ் மா அதிபர் தேசபந்து தென்னகோன் தெரிவித்துள்ளார்.

மத்திய வகுப்பு மக்களை ஏமாற்றி பணத்தை சேகரிக்கும் சிறிய நிதி நிறுவனங்கள், வங்கிகள், கடன் வழங்கும் சங்கங்கள் பெரிய அளவில் பணத்தை சேகரித்த பின்னர், வெளிநாடுகளுக்கு தப்பிச் செல்லும் நிலைமை காணப்படுகிறது.

இதனைத் தடுக்க சம்பந்தப்பட்ட நபர்களின் புகைப்படங்கள் உள்ளிட்ட விபரங்கள் பொலிஸ் தரவு கட்டமைப்புக்குள் உள்ளடக்கப்படும் என்றார். (ம-7)

## பொது...

சித் தலைவர் சஜித் பிரேமதாஸ இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

“குழந்தைகள், தாய்மார்கள், பொதுமக்கள் மற்றும் நலிந்த பிரிவினரின் உரிமைகளைப் பாதுகாக்கிறோம்என்ற பெயரில் ஜனநாயக விரோத சட்ட விதி முறைகளை கொண்டு வந்து நாட்டில் ஏகாதிபத்தியத்தை நிலைநாட்டி, பேச்சு சுதந்திரம், கலந்துரையாடல் சுதந்திரம், ஒன்றுகூடி பேசும் சுதந்திரம், தகவல் அறிதலுக்கான சுதந்திரம் உள்ளிட்ட மனித உரிமைகள் மற்றும் அடிப்படை உரிமைகளை மீறும் கடுமையான ஜனநாயக விரோத நடைமுறைக்கு அரசாங்கம் பிரவேசித்து வருகிறது.

ஜனாதிபதி தான் ஒரு ஜனநாயகவாதி என்பதை நாட்டுக்கும் உலகிற்கும் எடுத்துக்காட்டிய போதிலும், இந்தச் சட்டத்தை நடைமுறைப் படுத்துவதன் மூலம் அவர் கட்டமைத்த பிம்பம் பொய் என்பது நிரூபணமாகியுள்ளது.

இந்தச் சட்டத்தின் மூலம், அவரும் அவர் நியமிக்கும் ஆணைக்குழு உறுப்பினர்களும், அவர் நியமிக்கும் பாதுகாப்புப் படையினரும் இந்நாட்டின் சாதாரண மக்கள் மீது தம் இஷ்டத்துக்கு ஏற்றாற்போல் அழுத்தம் கொடுக்க முடியும்.

“பேசினால் சிறை செல்ல வேண்டி வரும்” என்ற அச்சத்தை ஏற்படுத்தி மக்களை வாயடைக்கும் வேலைத்திட்டத்தை ஜனாதிபதி கையாண்டுள்ளார். ஜனாதிபதி உண்மையான ஓர் ஜனநாயகவாதியாக இருந்தால், இந்த மோசமான சட்டமூலத்தை வாபஸ் பெற வேண்டும் என்றார். (ம-7)



















Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிளிநொச்சியில் ஹெரோயினுடன் கைதானவருக்கு ஆயுள் தண்டனை

## கிளிநொச்சி மேல் நீதமன்றம் தீர்ப்பு

(கிளிநொச்சி)

கிளிநொச்சியில் ஹெரோயினுடன் கைது செய்யப்பட்ட குற்றவாளிக்கு கிளிநொச்சி மேல் நீதி மன்றம் ஆயுட்கால சிறைத் தண்டனை விதித்து தீர்ப ளித்துள்ளது

கிளிநொச்சியில் கடந்த 2018 ஆம் ஆண்டு மே மாதம் 12ம் திகதி விசேட அதிரடிப்படையினர் மேற் கொண்ட சுற்றிவளைப்பின் போது 143 கிராம் ஹெரோ யினுடன் இரண்டு பேர் கைது செய்யப்பட்டனர். அவர்க ளுக்கு எதிராக கிளிநொச்சி மாவட்ட நீதவான் நீதிமன் றில் வழக்கு தொடரப்பட் டதையடுத்து சட்டமா அதிபர் திணைக்களத்தினால் கிளி நொச்சி மேல் நீதிமன்றில் வழக்கு தொடரப்பட்டது நேற்று குறித்த வழக்கானது கிளிநொச்சி மேல் நீதிமன்ற நீதிபதி ஏ. எம் .ஏ சகாப்தீன் முன்னிலையில் தீர்ப்புக்காக எடுத்துக் கொள்ளப்பட்டது இதன் போது இரண்டாது நபர் குற்றச்சாட்டுக்களில் இருந்து விடுவிக்கப்பட்டதை தொடர்ந்து முதலாவது எதிரி சார்பாக சட்டத் தரணி சிறிகாந்தா அவர்களும் சட்டமா அதிபர் திணைக்களத்தின் சார்பில் ஆஜரான அரச சட்டவாதி என் என். அர்ஜுனகுமார் அவர்களும் முன்னிலையாகியிருந்தனர்

எதிரி சார்பாக ஆஜரான சட்டத் தரணி குறித்த எதிரியானவர் இதற்கு முன்னர் குற்றங்கள் எதிலும் ஈடுபடவில்லை என்றும் அவர் இரண்டு சிறுநீரகங்களும் பாதிக்கப்பட்டு சிறுநீரக மாற்று சிகிச்சை பெற்றுள்ளவர் என்றும் மூன்று பிள்ளைகளின் தந்தை யாகவும்காணப்படுகின்றார்எனவும் தண்டனை குறைப்பு விண்ணப் பத்தை செய்து இருந்தார்.

இதே நேரம் சட்டமா அதிபர் திணைக்களத்தின் சார்பாக ஆஜரான சட்டவாதி தண்டனை யானது ஒரு முன்னோடியான தண்டனையாக இருக்க வேண் டும் குற்றவாளிக்கான தண்டனை யானது ஒரு தனிநபருக்கான தண்டனையாக கருதுவது அல் லாது ஒரு எதிர்கால இளம் சமூ கத்தை பாதுகாக்கின்ற ஒரு விடய மாக கருதி தண்டனை வழங்கப் பட வேண்டும் என்றும் கேட்கப்பட் டுள்ளது

இவ்வாறான விடயங்களை செவிமடுத்த மன்று குற்றவாளிக்கு ஆயுட்கால சிறைத்தண்டனை விதித்து தீர்ப்பளித்துள்ளது.

(ம-7,100,316)

# உடுவிலில் வீடுடைத்து நகைகள் திருட்டு

## இளைஞன் கைது

(யாழ்ப்பாணம்)

சுன்னாகம் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட உடுவில் - மல்வம் பகுதியில் வீடுடைத்து நகை திருடிய குற்றச்சாட்டின் பேரில் 20 வயதுடைய இளைஞர் ஒருவர் நேற்று கைது செய்யப்பட்டுள்ளார்.

குறித்த சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருகையில்,

கடந்த சில வாரங்களுக்கு முன்னர் உடுவில் - மல்வம் பகுதியில் வீடு ஒன் றினை உடைத்து திருட்டுசம்பவம்ஒன்று இடம்பெற்றுள்ளதாக சுன்னாகம் பொலிஸ் நிலையத் திற்கு முறைப் பாடு கிடைத் தது.

இந் நிலையில் சுன்னாகம் பொலிஸ் நிலையத்தின் குற் றத்தடுப்பு பிரிவு மற் றும் போதைப்பொ ருள்தடுப்பு பொலிஸார் நேற்றையதினம் மல்வம் பகுதியில் வசிக்கும் 20 வயது டைய இளைஞர் ஒரு வரைகைதுசெய்தனர்.

அவரிடம் மேற் கொண்ட விசாரணை களின் அடிப்படை யில் நல்லூர் மற்றும் மல்வம் பகுதிகளில் விற்பனை செய்யப் பட்ட 5 1/2 பவுண் திருட்டு நகைகள் கைப்பற்றப்பட்டன. குறித்த சந்தேகந பரை மல்லாகம் நீதி மன்றத்தில் முற்ப டுத்துவதற்கான நட வடிக்கைகளை பொலி ஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ம-7)


## மாப்பிள்ளை தேவை

- காரைநகர், இந்து, கௌரவ குலம், 1986, உத்தரம், Research Analysist Canada பெண்ணிற்கு மாப்பிள்ளை தேவை.
- காரைநகர், இந்து, கௌரவகுலம், 1981, திருவோணம், M.Sc in Software Engineering, UK பெண்ணிற்கு மாப்பிள்ளை தேவை.
- சித்தன்கேணி, இந்து கௌரவகுலம், 1982, சதயம், M.Sc Bio Medicine UK பெண்ணிற்கு மாப்பிள்ளை தேவை.
- காரைநகர், இந்து கௌரவகுலம் 1980, புனர்பூசம் M.Sc Engineering, UK பெண்ணிற்கு மாப்பிள்ளை தேவை.
- ஏழாலை, இந்து கௌரவ குலம், 1982, பூரம் LLB & LPC, Solitor, UK பெண்ணிற்கு மாப்பிள்ளை தேவை.
- கரவெட்டி, இந்து, கௌரவ குலம் 1980, அத்தம், Graduate, UK Citizen, Divorce பெண்ணிற்கு மாப்பிள்ளை தேவை.
- தெல்லிப்பளை, இந்து, கௌரவ குலம் 1988, மிருகசீரிடம், BSc, MBA, கனடா பெண்ணிற்கு மாப்பிள்ளை தேவை.
- ஆனைக்கோட்டை, இந்து, கௌரவ குலம், 1993, ரோகினி Master degree, Norway பெண்ணிற்கு மாப்பிள்ளை தேவை.
- உடுவில் இந்து, கௌரவ குலம், 1990, மிருகசீடம், MBBS doctor, UK பெண்ணிற்கு மாப்பிள்ளை தேவை.
- உரும்பிராய் இந்து, கௌரவ குலம், 1991, புனர்பூசம், MBBS doctor, Australia பெண்ணிற்கு மாப்பிள்ளை தேவை.

(18674)

S.Sharma J.P
Astrologer
Tel : 077 539 3728
Whatsapp : 077 803 8193

CANADA
VISITOR VISA
VISITOR VISA வில் கனடா செல்வதற்குரிய ஆலோசனைகள் மற்றும் Online விண்ணப்பங்கள் விரைவாக செய்து தரப்படும்
CIMS COLLEGE (C-8165)
0777-068-777
49A.சப்பல் லேன், யாழ்ப்பாணம்
V2 TRAVELS

உடனடி வேலை வாய்ப்பு
நிர்வாக உத்தியோகத்தர்



விமானப் பயணச்சீட்டுக்கள்
விரைவுப் பொதிகள் சேவை
விசா சேவைகள்
(C-8165)
V2 TRAVELS
எமது கிளைகள்
• கிளிநொச்சி • சுன்னாகம்
• சாவகச்சேரி • மானிப்பாய்
• நெல்லியடி • பருத்தித்துறை
• திருகோணமலை • வல்வெட்டித்துறை
• கோப்பாய் • புத்தூர்
• பண்டத்தரிப்பு • சங்கானை
• கொழும்பு
வயது :-30 வயதிற்குட்பட்டோர் (இருபாலாரும்)
அனுபவமுள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்
சம்பளம் - 30'000/-
பயிற்சியின்போது - 25'000/-
0777-068-777
v2vacancies@gmail.com

கனடாவில் உயர்கல்வி
குறைந்த கட்டணத்தில் இலகுவாக செல்லக்கூடிய நேர்வழி
STUDY IN UK & WORK VISA
ஆங்கில பயிற்சியுடன் கூடிய வெளிநாட்டு உயர்கல்வி மற்றும் வேலைவாய்ப்பு
நேரடியாக வருகைதந்து இலவச ஆலோசனைகளை பெற்றுக்கொள்ள
வெற்றிகரமான 13 வருட சேவையில்
WEC COLLEGE
புதிய உயர்கல்லூரி வளாகம்
ஆரியகுளம்,யாழ்ப்பாணம்
Whatsapp: 0094779265447
0212050988,0217200989
கிளை: சங்கத்தானை,சாவகச்சேரி
(18672)


## सत्यमेव जयते

## Consulate General of India, Jaffna

**Advt. No.JAF/ADM/578/01/2024**

The Consulate General of India, Jaffna is looking for a suitable candidate for filling up one (1) vacancy of the post of "Chauffeur/Driver". Only Sri Lankan Nationals with minimum 'O' level qualification and having a valid heavy vehicle driving license with minimum 3 years of relevant work experience can apply. Details of the vacancy and the application form are available on Consulate's web site https://www.cgijaffna.gov.in/announcement.

Interested candidates are requested to download the application form and submit the completed form by Post or in person to Head of Chancery, Consulate General of India, at14,Maruthady Lane, Nallur, Jaffna by **31st January, 2024.**

(C-8164)


## வீடு வாடகைக்கு தேவை

நல்லூர் மற்றும் நாவலர் வீதியை அண்மித்த பகுதிகளில் வீடு வாடகைக்கு தேவை.

070 777 6489
077 706 3527

(18668)

## மணப்பெண் தேவை

- இணுவில், இந்து, கௌரவ குலம், 1990, அனுஷம், Quantity Surveyor, Australia மாப்பிள்ளைக்குப் பெண் தேவை.
- கோண்டாவில், இந்து, கௌரவ குலம், 1990, ரேவதி, P.hd in Engineering, Australia மாப்பிள்ளைக்குப் பெண் தேவை.
- கரவெட்டி, இந்து, கௌரவ குலம், 1990, மகம் M.Sc. Engineering Finland மாப்பிள்ளைக்குப் பெண் தேவை.
- கந்தர்மடம், இந்து, கௌரவகுலம், 1989, உத்தராடம், M.Sc, Canada மாப்பிள்ளைக்குப் பெண் தேவை.
- உடுப்பிட்டி, இந்து, கௌரவ குலம், 1990, உத்தரட்டாதி, Phd, Civil Engineering Canada மாப்பிள்ளைக்கு பெண் தேவை.
- உடுப்பிட்டி, இந்து, கௌரவ குலம், 1990, அவிட்டம், B.Sc Engineering New Zealand மாப்பிள்ளைக்குப் பெண் தேவை.
- பருத்தித்துறை, இந்து, கௌரவ குலம், 1990 மகம், Degree Holder Canada மாப்பிள்ளைக்குப் பெண் தேவை.
- சுதுமலை, இந்து, கௌரவ குலம், 1975, மிருகசீரிடம், B.A Graduate, Australia மாப்பிள்ளைக்குப் பெண் தேவை.
- யாழ்ப்பாணம், இந்து, கௌரவ குலம், 1986, மகம், M.Sc, UK மாப்பிள்ளைக்குப் பெண் தேவை. (18674)

S.Sharma J.P
Tel : 077 539 3728
Whatsapp : 077 803 8193


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் இல. 191, ... யாழ்ப்பாணம் எனும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 19.01.2024 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.